செப்டம்பர் - அக்டோபர் 2025 தமிழாக்கம்

# The Herald

## of Christ's Kingdom



# வாழ்க்கையின் அனுபவங்கள்

- புது சிருஷ்டியின் ஜெநிப்பித்தல்
- கிறிஸ்துவுக்குள் குழந்தைகள்
- கிறிஸ்துவுக்குள் இளமைப்பருவம்
- இளம் வயது
- புது சிருஷ்டியின் இலையுதிர் காலம்
- கடவுளின் பிரகாரங்களில் செழுமையான வளர்ச்சி

# வாழ்க்கையின் பருவங்கள்

# ஆதியிலே



இயற்கையின் பருவங்களை ஒரு உருவகமாக கொண்டு உருவாக்கப்பட்ட இந்த இதழ், புது சிருஷ்டியின் வளர்ச்சியில் ஆழமான பாடங்களை, ஜெநிப்பிக்கப்படுதலிலிருந்து ஆவிக்குரிய முதிர்ச்சி வரையிலான பருவங்களை ஆராய்கிறது.

பரிசுத்த ஆவியின் கனிகளையும் கிருபைகளையும் வளர்க்க, கீழ்படிதல், பலி, நீதி, இரக்கம் மற்றும் தாழ்மை ஆகிய தலைப்புகளை எழுத்தாளர்கள் வலியுறுத்துமாறு சொன்னோம். அவர்கள் கட்டுரைகள், கற்றுக் கொள்வதும், வளர்வதும், கற்றுத் தருவதும், பாவம் நிறைந்த உலகிற்கு ஆசீர்வாதமாக இருப்பதும் ஆகியவற்றில் ஒரு கிறிஸ்தவ பயணியின் உத்வேகமூட்டும் பயணத்தை வெளிப்படுத்துகின்றன. இந்த பயணம், மனிதனை மீண்டும் தேவனுடைய சாயலுக்கு கொண்டு வர உதவுகிறது.

"**புது சிருஷ்டியின் ஜெநிப்பிக்கப்படுத்தல்**" என்ற பாடம் கடவுளின் பிரமாணங்களில் மகிழ்ச்சியடைவதன் மூலமும், பாவத்தின் வசீகரங்களுக்கு மேலாக சுயத்தின் பலியின் குறுகிய பாதையைத் தேர்ந்தெடுப்பதன் மூலமும் உண்மையான ஆசீர்வாதங்கள் வருகின்றன என்பதை வலியுறுத்துகிறது. ஆவிக்குரிய வளர்ச்சி மற்றும் நித்திய ஜீவன் பெற்று, நீதிமானாக்கப்படுத்தலுக்கும் ஒருவரின் அர்ப்பணிப்புக்கும் வழிவகுக்கிறது. விசுவாசிகள் ஆவிக்குரிய போரை எதிர்கொள்கிறார்கள், ஆனால் தேவனைச் சார்ந்து இருப்பதனால் பெலத்தைப் பெறுகிறார்கள். இந்த பெலம் கடவுளின் சேவைச் செய்வதற்கும், அவருக்கு கனமும் செலுத்தும் கிறிஸ்தவ பயணத்திற்கு அவர்களைத் தயார்படுத்தப்படுகிறார்கள். "**கிறிஸ்துவுக்குள் குழந்தைகள்**" என்ற பாடம், வாழ்க்கையின் சுருக்கத்தையும் ஆவிக்குரிய வளர்ச்சியின் முக்கியத்துவத்தையும் எடுத்துக்காட்டுகிறது. மனிதக் குழந்தைகள் தொடக்கத்தில் உதவியற்றவர்களாக இருந்தாலும், போஷாக்கும் பராமரிப்பும் பெற்று வளர்கிறார்கள். அதைப் போலவே, "கிறிஸ்துவுக்குள் குழந்தைகள்" எனப்படும் புதிய கிறிஸ்தவர்கள், தேவனின் ஆவியால் ஜெநிப்பிக்கப்பட்டு, அவருடைய வார்த்தையால் போஷிக்கப்பட்டு வளர்க்கப்படுகிறார்கள். அவர்கள் அடிப்படை சத்தியங்களை கற்றுக்கொள்கிறார்கள், மகிழ்ச்சியைத் தழுவுகிறார்கள், தேவன் மீதான விசுவாசம் மற்றும் நம்பிக்கையின் மூலம் வெற்றி பெறுகிறார்கள்.

"**கிறிஸ்துவுக்குள்ளான இளமைப் பருவம்**" என்ற பாடம், கோதுமைசாகுபடியை பிரதபலிக்கிறது, இது ஆவிக்குரிய வளர்ச்சிக்கான ஒரு முக்கிய காலகட்டம். மூப்பர்கள் இளம் விசுவாசிகளை தேவனின் வார்த்தை, ஜெபம் மற்றும் ஊழியத்திற்கான வாய்ப்புகளுடன் வளர்க்க வேண்டும், உலகின் தாக்கங்களுக்கு எதிராக அவர்களைப் பாதுகாக்க வேண்டும். சாமுயேல் தாவீது, திமோத்தேயு போன்ற வேதாகம உதாரணங்கள், ஆரம்பத்திலேயே வழங்கப்படும், வழிகாட்டுதல் விசுவாசத்தை வளர்த்து, இளைஞர்களை பலனுள்ள கிறிஸ்தவர்களாக ஆக்கி, தேவனை மகிமைப்படுத்த உதவுகிறதுஎன்பதை காட்டுகிறது.

"**இளைஞர்கள்**", வேதத்தில் வரும் யோசேப்பு மற்றும் தீமோத்தேயுவைப் போல, இளம் வயது கிறிஸ்தவர்கள் தங்கள் திறமைகளையும் பலத்தையும் புத்திசாலித்தனமாகப் பயன்படுத்த ஊக்குவிக்கப்படவேண்டும். இது, ரெபெக்காள் எடுத்துக்காட்டினதுபோல, தேவனுக்கும் மற்றவர்களுக்கும் தீவிரமான ஊழியம் செய்வதையும் உள்ளடக்கும். பெருமையைத் தவிர்ப்பது, வேறுபாடுகளை கிருபையுடன் கையாள்வது மற்றும் பூமிக்குரியவற்றை விட பரலோகப் பொக்கிஷங்களுக்கு முன்னுரிமை அளிப்பது ஆகியவற்றை இது வலியுறுத்துகிறது, உண்மையான நிறைவு கிறிஸ்துவைப் போன்ற நடத்தையிலிருந்து வருகிறது என்பதை எடுத்துக்காட்டுகிறது.

"**புது சிருஷ்டியின் இலையுதிர் காலம்**" என்ற பாடம், ஆவிக்குரிய முதிர்ச்சியை விவரிக்கிறது. புது சிருஷ்டி அனுபவம் மற்றும் தேவனின் வார்த்தையால் ஆவிக்குரிய பிறப்புக்காகத் தயாரிக்கப்படுகிறது. இந்த காலம், தேவனின் நேரத்தையும் நோக்கத்தையும் நம்பி, ஊழியம், தாழ்மையான சிந்தனை, மற்றும் ஆவியின் கனிகளை வளர்த்தெடுப்பதை உள்ளடக்கியதாகும்.

"**தேவனின் பிரகாரத்தில் செழித்து வளர்தல்**", என்பது தேவனின் நன்மையைப் பகிர்ந்து கொள்வதற்கான ஒரு காலமாகும். முதிர்ச்சியடைந்தவர்கள் இளைஞர்களுக்கு வழிகாட்டுவார்கள், சோதிக்கப்பட்ட விசுவாசத்திலிருந்து ஞானத்தை வழங்குவார்கள். யோசேப்பு, மோசே, தானியேல் ஆகியோர், வாழ்க்கையின் இறுதியிலும் கூட, நேர்மை, மன்னிப்பு, மற்றும் அசைக்க முடியாத நம்பிக்கை ஆகியவற்றின் மூலம், வலிமையான விசுவாசச் சுவடுகளை விட்டு சென்றுள்ளனர் என்பதை இந்த பாடம் காட்டுகிறது.

பண்டைய காலத்தில் தமது ஜனங்களின் வாழ்க்கையின் பலவேறு காலங்களை கடந்து வளரும் போது, தேவன் அவர்களுடன் பொறுமையாக இருந்தார். அவர்கள் என்ன தவறுகளைச் செய்தார்கள் ? அந்தப் பாடங்களை நம்முடைய ஆவிக்குரிய நடை முறையிலும் நாம் பயன்படுத்திக்கொள்ளலாமா ? உங்கள் விசுவாசம் பலப்பட வேண்டுமென ஜெபித்து, சோதனைகளால் பரிசோதிக்கப்பட்ட பின்வரும் உதாரணங்களை நாங்கள் வழங்குகிறோம்.

## செப்டம்பர் / அக்டோபர் 2025,


**புது சிருஷ்டியின் ஜெநிப்பித்தல்** 2
வசந்த காலத்தின் துவக்கம்

**கிறிஸ்துவுக்குள் குழந்தைகள்** 7
வசந்த காலத்தின் பிற்பகுதி

**கிறிஸ்துவுக்குள் இளமைப்பருவம்** 15
கோதுமையின் வளர்ச்சி

**இளம் வயது** 19
கோடை காலம்

**புது சிருஷ்டியின் இலையுதிர் காலம்** 26
பிரதிபலிப்பும் முதிர்ச்சியும்

**கடவுளின் பிரகாரங்களில் செழுமையான வளர்ச்சி** 32
குளிர்காலம்

**இன்றைய தீர்க்கதரிசனம்** 37
டெக்சாஸில் வெள்ளப்பெருக்கு

**பிரசங்கி 3:1-8 பின் அட்டை** 43

## வசந்த காலத்தின் துவக்கம்

# புது சிருஷ்டியின் ஜெநிப்பித்தல்



— Tom Ruggirello

"துன்மார்க்கருடைய ஆலோசனையில் நடவாமலும், பாவிகளுடைய வழியில் நில்லாமலும், பரியாசக்காரர் உட்காரும் இடத்தில் உட்காராமலும், கர்த்தருடைய வேதத்தில் பிரியமாயிருந்து, இரவும் பகலும் அவருடைய வேதத்தில் தியானமாயிருக்கிற மனுஷன் பாக்கியவான்." (சங்கீதம்1:1,2)

ஆங்கிலத்தில் சங்கீதப் புத்தகம் "பாக்கியவான்கள்" என்ற வார்த்தையுடன் தொடங்குகிறது.

எபிரெய வார்த்தை பண்மையில் உள்ளது, ஏனெனில், கர்த்தரில் பிரியப்பட்டு, பாவத்தின் பாதைகளில் நடக்க மறுப்பவர்களுக்கு இது பல ஆசீர்வாதங்களைக் குறிக்கிறது.

இயேசுவும் இதே போன்ற ஒரு கருத்தைச் சொன்னார். "இடுக்கமான வாசல்வழியாய் உட்பிரவேசியுங்கள், கேட்டுக்குப் போகிற வாசல் விரிவும், வழி விசாலமுமாயிருக்கிறது, அதின் வழியாய்ப் பிரவேசிக்கிறவர்கள் அநேகர். ஜீவனுக்குப் போகிற வாசல் இடுக்கமும், வழி நெருக்கமுமாயிருக்கிறது, அதைக் கண்டுபிடிக்கிறவர்கள் சிலர்."(மத்தேயு 7:13, 14) சங்கடமான (அல்லது குறுகிய) வாயிலுக்குள் நுழைவது கடினமாக இருக்கலாம். வெகுமதிகள்



திருப்திகரமாக இருப்பதாலும், வாழ்க்கை குறுகிய காலம் மட்டுமே நீடித்து, மரணத்தில் முடிவடையும் என்பதை பலர் உணராதிருப்பதாலும், பாவத்தின் அகன்ற வாயில் மாம்சத்தை ஈர்க்கும் பல வசீகரங்களுக்கு மனுஷர் பலியாகிறார்கள்.

குறுகிய வாசலின் நன்மைகளைப் புரிந்துகொள்ள, சுய தியாகமும் இருதயப்பூர்வமான பக்தியும் இந்த வாழ்க்கையில் ஏன் மிகுந்த ஆசீர்வாதங்களை வழங்குகின்றன என்பதையும், இக்காரியங்கள் அதற்கும் அப்பால் சகித்துக்கொள்ள ஒருவருக்கு உதவுகின்றன என்பதையும் ஒருவர் கண்டுணர வேண்டும். ஆண்டவரைத் தேடும்போதும், அர்ப்பணிப்பின் விலையை எடைபோடும் போதும் ஒவ்வொரு இருதயமும் சிந்திக்க வேண்டிய கருத்துக்கள் இவை.

அழகிய மொழியில், சீஷத்துவத்தின் சில சிறந்த வெகுமதிகளை சங்கீதக்காரர் தொடர்ந்து விவரித்தார். "அவன் நீர்க்கால்களின் ஓரமாய் நடப்பட்டு, தன் காலத்தில் தன் கனியைத் தந்து, இலையுதிராதிருக்கிற மரத்தைப் போலிருப்பான், அவன் செய்வதெல்லாம் வாய்க்கும். " (சங்கீதம் 1:3)இந்த அழகான உருவகம் ஒரு விசுவாசியை ஏராளமான ஊட்டச்சத்துக்கள் நிறைந்த இடத்தில் நடப்பட்ட மரமாக சித்தரிக்கிறது. கடவுளுடைய வார்த்தையைப் பருகுபவர்களுக்குள் வளரும் ஆழமான ஆவிக்குரிய வேர்களிலிருந்து பலமும் நிலைத்தன்மையும் உருவாகின்றன.வேறு எந்தப் பாதையையும் போலல்லாமல், இந்த வாசல் நித்திய ஜீவனுக்கு வழிவகுக்கிறது. எந்தவொரு முரணான வாழ்க்கை முறையும், ஒரு காலத்திற்கு திருப்திகரமாக இருந்தாலும், நிலைத்திருக்கவோ அல்லது நித்திய ஜீவனை வழங்கவோ முடியாது.

## செலவைக் கணக்கிடுதல்

"உங்களில் ஒருவன் ஒரு கோபுரத்தைக் கட்ட மனதாயிருந்து, அஸ்திபாரம் போட்டபின்பு முடிக்கத் திராணியில்லாமற்போனால், பார்க்கிறவர்களெல்லாரும் - இந்த மனுஷன் கட்டத்தொடங்கி, முடிக்கத் திராணியில்லாமற்போனான் என்று சொல்லித் தன்னைப் பரியாசம் பண்ணாதபடிக்கு, அதைக் கட்டித் தீர்க்கிறதற்குத் தனக்கு நிர்வாகமுண்டோ இல்லையோ என்று முன்பு அவன் உட்கார்ந்து செல்லுஞ்செலவைக் கணக்குப் பாராமலிருப்பானோ? அன்றியும் ஒரு இராஜா மற்றொரு இராஜாவோடே யுத்தஞ்செய்யப் போகிறபோது, தன்மேல் இருபதினாயிரம் சேவகரோடே வருகிற அவனைத் தான் பதினாயிரம் சேவகரைக்கொண்டு எதிர்க்கக்கூடுமோ கூடாதோ என்று முன்பு உட்கார்ந்து ஆலோசனை பண்ணாமலிருப்பானோ? .... அப்படியே உங்களில் எவனாகிலும்தனக்கு உண்டானவைகளையெல்லாம் வெறுத்துவிடாவிட்டால் அவன் எனக்குச் சீஷனாயிருக்கமாட்டான்." (லூக்கா14:28-31, 33)

"அவரைப் பின்பற்ற எனக்கு உள்ள அனைத்தையும் நான் விட்டுவிடலாமா ?" என்று சுயமதிப்பீடு செய்யும் நேரத்தில், இயேசுவைப் பின்பற்றக்கூடியவர்கள் கேட்க வேண்டிய கேள்வியாகும். சிலருக்கு, பதில் சொல்வது கடினமாக இருக்கலாம். மற்றவர்களுக்கு, பதில் எளிதாகக் கிடைக்கும். உண்மையில், பரலோகத் தந்தைக்கும் கர்த்தராகிய இயேசுவுக்கும் ஊழியம் செய்யும் வாய்ப்பு, போற்றப்பட வேண்டிய ஒரு பாக்கியமாகும். எதை விட்டுவிட வேண்டும் என்பதில் கவனம் செலுத்துவதை காட்டிலும், கடவுளின் ஊழியத்திற்காகவாழும் வாழ்க்கை அவரைக் கனப்படுத்தி உலகைப் பாவத்திலிருந்தும் மரணத்திலிருந்தும் மீட்டெடுப்பதற்கான வாய்ப்புகளை வழங்குகிறது என்ற புரிதலுடன் அர்ப்பணம் வருகிறது. வாழ்க்கையில் இதைவிடப் பெரிய நோக்கம் எதுவும் இருக்க முடியாது.



## ஜீவனுள்ள நம்பிக்கைக்கு ஜெநிப்பிக்கப் படுதல்

"நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் பிதாவாகிய தேவனுக்கு ஸ்தோத்திரம் உண்டாவதாக, அவர், இயேசுகிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுந்ததினாலே, அழியாததும் மாசற்றதும் வாடாததுமாகிய சுதந்தரத்திற் கேதுவாக, ஜீவனுள்ள நம்பிக்கை உண்டாகும்படி, தமது மிகுந்த இரக்கத்தின்படியே நம்மை மறுபடியும் ஜெநிப்பித்தார்." (1பேதுரு 1:3,4)

அர்ப்பணிக்கப்பட்ட வாழ்க்கையை பேதுரு இயற்கையான பிரசவத்திற்கு ஒப்பிட்டார்.

ஒரு பெண்ணில் விதை விதைக்கப்பட்ட பிறகு, அது முதிர்ச்சியடைந்து மனித குணங்களை வளர்க்கத் தொடங்குகிறது. அதேபோல், ஒரு விசுவாசியின் இருதயத்தில் சத்தியத்தின் விதை விதைக்கப்படும் போது, ஒரு ஜீவனுள்ள நம்பிக்கை வேரூன்றுகிறது. இது கடவுளிடமிருந்து வந்து பரலோகத்தில் நித்திய ஜீவனுக்கு வழிநடத்துவதால் அது ஒரு ஜீவனுள்ள நம்பிக்கையாகும். "சோர்ந்துபோகாமல் நற்கிரியைகளைச் செய்து, மகிமையையும் கனத்தையும் அழியாமையையும் தேடுகிறவர்களுக்கு நித்திய ஜீவனை அளிப்பார்." (ரோமர் 2 : 7)

அப்போஸ்தலன் பவுல் ஒரு ஆவிக்குரிய வாழ்க்கையின் தொடக்கத்தை இரண்டு படிகள் கொண்ட செயல்முறையாக விவரித்தார்.

"இவ்விதமாக, நாம் விசுவாசத்தினாலே நீதிமான்களாக்கப்பட்டிருக்கிறபடியால், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து மூலமாய் தேவனிடத்தில் சமாதானம் பெற்றிருக்கிறோம். அவர்மூலமாய் நாம் இந்தக் கிருபையில் பிரவேசிக்கும் சிலாக்கியத்தை விசுவாசத்தினால் பெற்று நிலைகொண்டிருந்து, தேவமகிமையை அடைவோமென்கிற நம்பிக்கையினாலே மேன்மைபாராட்டுகிறோம். இப்படி நாம் அவருடைய இரத்தத்தினாலே நீதிமான்களாக்கப்பட்டிருக்க, கோபாக்கினைக்கு நீங்கலாக அவராலே நாம் இரட்சிக்கப்படுவது அதிக நிச்சயமாமே." (ரோமர் 5:1, 2, 9)

விசுவாசம் குமாரத்துவத்திற்குகான பயணத்தைத் தொடங்குகிறது. விசுவாசம் பிரதிஷ்டைக்கு வழிவகுக்கும் போது, கிறிஸ்துவின் தகுதி பின்னர் பயன்படுத்தப்படுகிறது, இது கடவுளின் பார்வையில் நீதிமானாக்கப்படுதலை வழங்குகிறது. ஒவ்வொரு விசுவாசியும் பின்னர் கடவுளின் முழு மகனாகக் கருதப்படுகிறார். "பிரியமானவர்களே, இப்பொழுது தேவனுடைய பிள்ளைகளாயிருக்கிறோம், இனி எவ்விதமாயிருப்போமென்று இன்னும் வெளிப்படவில்லை, ஆகிலும் அவர் வெளிப்படும்போது அவர் இருக்கிறவண்ணமாகவே நாம் அவரைத் தரிசிப்பதினால், அவருக்கு ஒப்பாயிருப்போமென்று அறிந்திருக்கிறோம்." (1யோவான் 3:2)"அவரை அவர் இருக்கிறவண்ணமாகவே அவரை தரிசிப்பது " நம் புரிதலுக்கு அப்பாற்பட்டது. பின்வரும் வார்த்தைகளின் யதார்த்தத்தை நாம் கற்பனை செய்ய மட்டுமே முடியும். "அழிவுள்ளதாகிய இது அழியாமையையும், சாவுக்கேதுவாகிய இது சாவாமையையும் தரித்துக்கொள்ளவேண்டும். அழிவுள்ளதாகிய இது அழியாமையையும், சாவுக்கேதுவாகிய இது சாவாமையையும் தரித்துக்கொள்ளும்போது, மரணம் ஜெயமாக விழுங்கப்பட்டது என்று எழுதியிருக்கிற வார்த்தை நிறைவேறும்." (1கொரிந்தியர் 15:53, 54 )குறுகிய வாசலைக் கடந்து செல்வது மட்டுமல்லாமல், குறுகிய பாதையில் செழித்து, இறுதிவரை உண்மையாக இருப்பவர்களுக்கான எதிர்காலம் இதுதான்.

## ஆவிக்குரிய யுத்தம்

"நாங்கள் மாம்சத்தில் நடக்கிறவர்களாய் ிருந்தும், மாம்சத்தின்படி போர் செய்கிறவர்களல்ல. எங்களுடைய போராயுதங்கள் மாம்சத்துக் கேற்றவைகளாயிராமல், அரண்களை நிர்மூலமாக்குகிறதற்குத் தேவபலமுள்ளவைகளாயிருக்கிறது. அவைகளால் நாங்கள் தர்க்கங்களையும், தேவனை அறிகிற அறிவுக்கு விரோதமாய் எழும்புகிற எல்லா மேட்டிமையையும் நிர்மூலமாக்கி, எந்த எண்ணத்தையும் கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படியச் சிறைப்படுத்து கிறவர்களாயிருக்கிறோம். " (2கொரிந்தியர் 10:3-5)கடவுளுடன் ஒரு உறவை விரும்பும் போது ஒவ்வொரு விசுவாசியும் எதிர்கொள்ள வேண்டிய போராட்டத்தை அப்போஸ்தலன் பவுல் விவரிக்கிறார். தவறான நம்பிக்கைகள் மற்றும் மனித பகுத்தறிவுக்கு எதிராக நாம் போராடுகிறோம். கடவுளுக்கு மேலாகவோ அல்லது அதற்குப் பதிலாகவோ தன்னை நிலைநிறுத்திக் கொள்ளும் எதையும் நாங்கள் எதிர்க்கிறோம். மனிதக் கண்ணோட்டத்தில், இது சாத்தியமற்ற காரியமாகத் தோன்றினாலும், இந்தப் போரில் ஈடுபடும்படி நம்மைக் கேட்பதில் மிகுந்த ஞானம் இருக்கிறது என்பதை கடவுள் அறிவார்.

அப்போஸ்தலன் பவுலின் வாழ்க்கையிலும் அதே ஞானம் செயலாற்றப்பட்டது.தனது பார்வைக் குறைவைச் சமாளிக்க, பவுல் கடவுளிடம் நிவாரணம் தேடினார். "அதற்கு அவர் - என் கிருபை உனக்குப்போதும், பலவீனத்திலே என் பலம் பூரணமாய் விளங்கும் என்றார். ஆகையால், கிறிஸ்துவின் வல்லமை என்மேல் தங்கும்படி, என் பலவீனங்களைக் குறித்து நாம் மிகவும் சந்தோஷமாய் மேன்மை பாராட்டுவேன். அந்தப்படி நான் பலவீனமாயிருக்கும் போதே பலமுள்ளவனாயிருக்கிறேன், ஆகையால் கிறிஸ்துவினிமித்தம் எனக்கு வரும் பலவீனங்களிலும், நிந்தைகளிலும், நெருக்கங்க ளிலும் துன்பங்களிலும், இடுக்கண் களிலும் நான் பிரியப்படுகிறேன்." (2கொரிந்தியர் 12:9, 10)

பார்வைக் குறைபாட்டினால் ஏற்படும் போராட்டம் தன்னை கடவுளைச் சார்ந்து இருக்கச்

செய்யும் என்பதை அப்போஸ்தலன் உணர்ந்தார். ஆவிக்குரிய கவசத்தை விவரிக்கையில், பவுல் கிறிஸ்துவின் மற்ற சீஷர்களை ஊக்குவித்து, இவ்வாறு கூறினார் - "கடைசியாக, என் சகோதரரே, கர்த்தரிலும் அவருடைய சத்துவத்தின் வல்லமையிலும் பலப்படுங்கள்."(எபேசியர் 6:10)வாழ்க்கையின் போராட்டங்கள் மூலம் மட்டுமே, கர்த்தரை மனதாரச் சார்ந்திருக்கவும் அவருடனான நமது பிணைப்பையும் வலுப்படுத்த முடியும். ஒவ்வொரு சோதனையும் சவாலான அனுபவமும் நீண்டகால பலனைப் பெற்று தரும்.

## ஆவியினால் உயிர்ப்பிக்கப்படுதல்

"அன்றியும் இயேசுவை மரித்தோரிலிருந்து எழுப்பினவருடைய ஆவி உங்களில் வாசமாயிருந்தால், கிறிஸ்துவை மரித்தோரிலிருந்து எழுப்பினவர் உங்களில் வாசமாயிருக்கிற தம்முடைய ஆவியினாலே சாவுக்கேதுவான உங்கள் சரீரங்களையும் உயிர்ப்பிப்பார். (ரோமர் 8:11) உயிர்ப்பிக்கப்படுதல் என்றால் கடவுளின் சேவையில் வல்லமையூட்டப்படுதல் என்று பொருள்.

அவருடைய கிருபையான திட்டத்தை அறிந்து கொள்வதினால், நாம் ஒரு பெரிய நோக்கத்திற்காக சேவை செய்கிறோம் என்பதை அறிந்து சுய தியாகத்திற்கு நம்மை ஊக்குவிப்பதாகும். இது நம்மை உலகம் புரிந்துகொள்ளாத ஒரு வாழ்க்கை முறைக்கு நம்மை வழிநடத்தும். இது சுயநலத்திற்கு எதிரானதும், மற்றவர்களை ஆசீர்வதிக்க ஒரு வழியைக் காண்பிக்ககூடியதாகும். இது தெய்வீகமானதும், திரைக்கு அப்பால் இன்னும் சிறப்பான சேவை செய்வதற்கு கிறிஸ்துவின் சரீரத்தை ஆயத்தம் பண்ணக்கூடியதாகவும் இருக்கிறது. இயேசுவின் வாழ்க்கையைப் படிப்பதிலிருந்தும், நாம் தயராகி வரும் அற்புதமான வேலையைப் புரிந்துகொள்ள முயற்சிப்பதிலிருந்தும் ஒரு வல்லமையுள்ள உத்வேகம் (உற்சாகம்) வருகிறது. "ஒருவன் எனக்கு ஊழியஞ்செய்கிறவனானால் என்னைப் பின்பற்றக்கடவன், நான் எங்கே இருக்கிறேனோ அங்கே என் ஊழியக்காரனும் இருப்பான், ஒருவன் எனக்கு ஊழியஞ்செய்தால் அவனைப் பிதாவானவர் கனம்பண்ணுவார்." (யோவான் 12:26)என்று இயேசு கூறினார்.

கடவுளை மதித்து கனப்படுத்த வேண்டும் என்பது ஒவ்வொரு பரிசுத்த இருதயத்திற்கும் ஒரு இலக்காக இருக்க வேண்டும். இத்தகைய கனப்படுத்தல் பல வடிவங்களில் வருகிறது, இருதயத்தின் ரகசிய எண்ணங்கள் முதல் நாம் வெளிப்படுத்தும் சரீரத்தின் கிரியைகள் வரை.

## ஒரு அற்புதமான பயணம்



"மெய்யாகவே மெய்யாகவே நான் உங்களுக்குச் சொல்லுகிறேன், நான் என் பிதாவினிடத்திற்குப் போகிறபடியினால், என்னை விசுவாசிக்கிறவன் நான் செய்கிற கிரியைகளைத் தானும் செய்வான், இவைகளைப்பார்க்கிலும் பெரிய கிரியைகளையும் செய்வான்." (யோவான் 14:12) கர்த்தருடைய பூமிக்குரிய ஊழியத்தின் போது, அவர் நோயுற்றவர்களைக் குணப்படுத்தினார், மரித்தவர்களை எழுப்பினார், மேலும் பல அற்புதங்களைச் செய்தார். ஆனாலும், அவர் இன்னும் சாதிக்கப் போகும் செயல்களுடன் ஒப்பிடும்போது இந்த செயல்கள் குறைவானவைகளே. அவர் விசுவாசிகளுக்கு அவர்களின் எதிர்காலத்தைப் பற்றிய ஒரு நுண்ணறிவை அளித்தார், அவர் மேலும் கூறியபோது,

"என்னை விசுவாசிக்கிறவன் நான் செய்கிற கிரியைகளைத் தானும் செய்வான், இவைகளைப்

பார்க்கிலும் பெரிய கிரியைகளையும் செய்வான்." (யோவான் 14-12) ஆவிக்குரிய வளர்ச்சியும் தனிப்பட்ட தியாகமும் ஒவ்வொரு விசுவாசியையும் மனுக்குலத்துடன் கர்த்தருடைய இராஜ்ய வேலையில் பகிர்ந்து கொள்ளத் தயார்படுத்தும். நீதியை விரும்பி அக்கிரமத்தை வெறுக்கிற வர்களால் மட்டுமே சரி எது, தவறு எது என்பதன் அர்த்தத்தைக் கற்பிக்க முடியும்.

முன்பு கடவுளைத் தேடி அவருக்கு சேவை செய்ய தங்களை அர்ப்பணித்தவர்களால் மட்டுமே பாவமுள்ள உலகத்தை கடவுளிடம் அழைத்துச் செல்ல முடியும். இவர்கள் உலகத்தின் தீய கவர்ச்சிகளையும், தங்கள் சுயநல மாம்சத்தையும், பாவம் செய்வதற்கான பிசாசின் சோதனைகளையும் ஜெயம் கொண்டவர்கள்.

ஒரு கிறிஸ்தவரின் வெற்றிகரமான நடை, ஆசரிப்புக் கூடாரத்தில் அழகாக சித்தரிக்கப் பட்டுள்ளது. இந்தப் பயணம் பாளைத்திற்கு புறம்பே தொடங்கி கடவுளின் பிரசன்னத்தில் முடிகிறது. ஆனால் கிறிஸ்துவின் வேலையில் பங்கு கொள்வதை விட உயர்ந்த அழைப்பு அல்லது பெரிய பாக்கியம் எதுவும் வழங்கப்படவில்லை. இது ஒரு அற்புதமான பயணம்!

## விதைகளை நடவுசெய்தல்

"பிள்ளையானவன் நடக்கவேண்டிய வழியிலே அவனை நடத்து, அவன் முதிர்வயதிலும் அதை விடாதிருப்பான்." (நீதிமொழிகள் 22:6)

பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளுக்குக் கொடுக்கக்கூடிய மிகச் சிறந்த பரிசு, தெய்வீகக் கொள்கைகளில் அவர்களைப் பயிற்றுவிப்பதாகும். குழந்தைகள் வளரும் போது கர்த்தரைப் பற்றி உற்சாகமூட்டி, ஆறுதலான வார்த்தைகளில் பேசுவது, நம்பியிருக்கக்கூடிய பலத்தின் மூலத்தை உருவாக்குகிறது. இளமை பருவம் என்பது அவர்களின் வாழ்க்கையின் வசந்த காலம், மேலும் ஆவிக்குரிய விதைகளை ஆரம்பத்தில் விதைப்பது பெரும்பாலும் அற்புதமான ஆவிக்குரிய வளர்ச்சியைக் கொண்டுவருகிறது. கர்த்தருடைய நன்மையைப் பற்றிப் பேசுவது குழந்தைகள் இறுதியில் தங்கள் சொந்தத் தேர்வுகளையும் உறுதிமொழிகளையும் எடுக்க வழிநடத்த உதவும்.

பின்னர், அவர்கள் புத்திசாலித்தனமாகத் தேர்ந்தெடுத்தால், குணநல வளர்ச்சியில் நன்மைகள் பெருகும், மேலும் பரலோகத் தந்தையையும் நம் ஆண்டவராகிய இயேசுவையும் பற்றிய சிறந்த புரிதலும் அதிகரிக்கும்.

சாலொமோன் தனது ஞானமான ஆலோசனையை வாலிபர்களுடன் பகிர்ந்து கொண்டார் - "நீ உன் வாலிபப்பிராயத்திலே உன் சிருஷ்டிகரை நினை, தீங்கநாட்கள் வராததற்கு முன்னும், எனக்குப் பிரியமானவைகளல்ல என்று நீ சொல்லும் வருஷங்கள் சேராததற்குமுன்னும்....." (பிரசங்கி 12:1) என்று கூறினார். வேறு வார்த்தைகளில் கூறுவதானால், வாழ்க்கையின் ஆரம்பத்திலேயே கர்த்தரை நினைவுகூருவது சவாலான அனுபவங்களில் பலத்தை அளிக்கும்.

"அவற்றில் மகிழ்ச்சி இல்லை" என்பதைக் கண்டறிவதற்குப் பதிலாக, கர்த்தரிடம் திரும்பிய இருதயம் ஒவ்வொரு அனுபவத்திலும் அர்த்தத்திலும் உள்ள நோக்கத்தை காண முடியும். "நன்மை செய்கிறதில் சோர்ந்துபோகாமல் இருப்போமாக, நாம் தளர்ந்து போகாதிருந்தால் ஏற்றகாலத்தில் அறுப்போம்." (கலாத்தியர் 6 : 9)

### வசந்த காலத்தின் பிற்பகுதி

# கிறிஸ்துவில் குழந்தைகள்



"ஒவ்வொன்றிற்கும் ஒவ்வொரு காலமுண்டு, வானத்தின் கீழிருக்கிற ஒவ்வொரு காரியத்துக்கும் ஒவ்வொரு சமயமுண்டு. பிறக்க ஒரு காலமுண்டு, இறக்க ஒரு காலமுண்டு, நட ஒரு காலமுண்டு, நட்டதைப் பிடுங்க ஒரு காலமுண்டு," (பிரசங்கி 3:1, 2)

**— Dan Wesol**

ஒவ்வொரு வகையான வாழ்க்கையிலும் வெவ்வேறு மற்றும் படிப்படியான வளர்ச்சி நிலைகள் உள்ளன. உதாரணமாக, மனிதர்களைப் பொறுத்தவரை, கருத்தரித்து ஒன்பது மாதங்களுக்குப் பிறகு ஒரு குழந்தை பிறக்கிறது.

சாலொமோன், ஒரு ஞானமுள்ள, வயதான இராஜாவாக, தனது அதிகாரப்பூர்வ பட்டமான "சாலமன், இஸ்ரயேலின் இராஜா " என்பதற்குப் பதிலாக "பிரசங்கி" என்ற புனைப்பெயரைப் பயன் படுத்துகிறார். அவர் தனது பல குறைபாடுகளை அடையாளம் காணும் ஞானத்தைக் கொண்டிருந்தாலும் ஒரு பிரசங்கியாக, மாம்ச இஸ்ரயேலருக்கும், ஆவிக்குரிய இஸ்ரயேலருக்கும் தனது அனுபவங்களையும் அவதானிப்புகளையும் தாழ்மையுடன் பகிர்ந்து கொள்கிறார்.



நமது ஆதார வசனத்தில், சாலொமோன் இராஜா வாழ்க்கையின் தொடக்கத்தையும் முடிவையும் குறிக்க வருடத்தின் இரண்டு பருவங்களை உருவகங்களாகப் பயன்படுத்துகிறார்.

"நடவு செய்வதற்கான நேரம்" என்பது விதைக்கும்காலம், இது வசந்த காலத்திற்கு ஒத்திருக்கிறது, அதே நேரத்தில் "பறிக்கும் நேரம்" என்பது அறுவடை காலமாகும் இது இலையுதிர் காலத்திற்கு ஒத்திருக்கிறது.

## ஜனத்தொகையின் வளர்ச்சி

ஒவ்வொரு ஆண்டும் பிறக்கும் மனிதக் குழந்தைகளின் எண்ணிக்கை குறிப்பிடத்தக்கது. .வொல்ஃப்ராம் ஆல்பா (Wolfram Alpha computational knowledge engine)கணக்கீட்டு அறிவின்படி, உலகளவில் ஆண்டுதோறும் சுமார் 140 மில்லியன் குழந்தைகள் பிறக்கின்றன. அதாவது ஒரு நாளைக்கு 372,960, ஒரு மணி நேரத்திற்கு 15, 540, ஒரு நிமிடத்திற்கு 259, ஒவ்வொரு வினாடிக்கும் தோராயமாக நான்கு குழந்தைகள் பிறக்கின்றன. ஒவ்வொரு நாளும் நான்கு விளையாட்டு அரங்கங்களை நிரப்ப போதுமான குழந்தைகள் பிறக்கின்றன, அந்த ஒவ்வொன்று விளையாட்டு அரங்கமும் 93,240 பேர் அமரக்கூடியவை.

அதே நேரத்தில், உலகளாவிய சராசரி இறப்பு விகிதம், பிறப்பு விகிதத்தில் பாதிக்கும் குறைவாக உள்ளது. ஒவ்வொரு ஆண்டும் தோராயமாக 59. 3 மில்லியன் மக்கள் இறக்கினறனர், ஒரு நாளைக்கு 155,520 பேர், ஒரு மணி நேரத்திற்கு 6,480 பேர், நிமிடத்திற்கு 108 பேர், அல்லது ஒவ்வொரு நொடியும் கிட்டதட்ட இரண்டு பேர் இறக்கின்றனர். 100,000 பேர் அமரக்கூடிய ஒன்றரை விளையாட்டு அரங்கங்களை நிரப்புவதற்கு ஒவ்வொரு நாளும் போதுமான ஜனங்கள் மரிக்கின்றனர்.

இந்தக் கட்டுரையை நீங்கள் படிக்கத் தொடங்கியதிலிருந்து, சுமார் 389 குழந்தைகள் பிறந்திருக்கின்றன, "சிரிக்க ஒரு காலம்" மற்றும் "நடனமாட ஒரு காலம்" ஆனால் அதே நேரத்தில், சுமார் 162 பேர் இறந்துவிட்டார்கள், "அழ ஒரு காலம்" மற்றும் "துக்கப்பட ஒரு காலம்."இந்த உலகத்திற்குள் நுழையும் வாழ்க்கையிலிருந்து

கிடைக்கும் மகிழ்ச்சி, உலகத்தை விட்டு வெளியேறும் வாழ்க்கையிலிருந்து கிடைக்கும் துக்கத்தை விட இரண்டு மடங்கு அதிகமாக இருக்கும் வகையில் கடவுள் இதை வடிவமைத்துள்ளார்.

### வாழ்க்கையின் சுருக்கம் (குறுகிய)

"காலம் குறுகியது" என்பதைக் குறிக்கும் வேதவசனங்களைக் கருத்தில் கொள்ளும் போது இந்த எண்கள் சில முன்னோக்குகளை வழங்குகின்றன. (1கொரிந்தியர் 7:29) "பகற்காலமிருக்குமட்டும் நான் என்னை அனுப்பினவருடைய கிரியைகளைச் செய்யவேண்டும், ஒருவனும் கிரியை செய்யக்கூடாத இராக்காலம் வருகிறது." (யோவான் 9:4) என்று கூறி இயேசு இதை உறுதிப்படுத்தினார்.

இந்த ஆழ்ந்த சிந்தனையைத் தூண்டும் வார்த்தைகள், கடவுள் நமக்குக் கொடுக்கும் ஒவ்வொரு வாய்ப்பையும், அவருடைய அன்பின் சுவிசேஷத்தைப் பகிர்ந்து கொள்ளவும், இயேசுவைப் பின்பற்றும் பாக்கியத்தைப் பாராட்டவும், பூமியிலுள்ள அனைத்து குடும்பங்களையும் ஆசீர்வதிக்கும் கடவுளுடைய இராஜ்யத்தின் விடியலில் வாழும் வாய்ப்பைப் புரிந்துகொள்ளவும் நாம் பயன்படுத்த வேண்டும் என்பதைக் குறிக்கின்றன.

அப்போஸ்தலன் யாக்கோபு சுருக்கமான வாழ்க்கையை இவ்வாறு வெளிப்படுத்துகிறார். "நாளைக்கு நடப்பது உங்களுக்குத் தெரியாதே, உங்கள் ஜீவன் எப்படிப்பட்டது கொஞ்சக்காலந் தோன்றிப் பின்பு தோன்றாமற்போகிற புகையைப் போலிருக்கிறதே." (யாக்கோபு4 : 14)நம் வாழ்க்கை வெறும் நீராவிதான் என்பதை உணர்ந்துகொள்வது, ஒவ்வொரு தருணத்தையும் பொக்கிஷமாகக் கருதி, நம் நேரத்தை புத்திசாலித்தனமாகப் பயன்படுத்த உதவும்.

### நம்முடைய நேரம்

நம்முடைய ஒவ்வொரு நாளும், விழித்திருக்கும் பதினாறு மணிநேரத்தை கவனியுங்கள் -பொதுவாக எட்டு மணிநேரம் வேலைச் செய்வதற்கும், இரண்டு மணிநேரம் வீட்டு வேலைகளுக்கும் செலவிடுகிறார். இதனால் ஒவ்வொரு நாளும் ஆறு மணிநேரம் மட்டுமே விரும்பியபடி வேலை செய்ய முடியும், அதேநேரத்தில் ஓய்வு பெற்றவர்கள் அதிகமாக நேரம் செலவிடலாம். இருப்பினும், குழந்தைகளை வைத்திருப்பவர்கள் அல்லது வயதான பெற்றோர், தாத்தா பாட்டி, அல்லது நோய்வாய்ப்பட்ட வாழ்க்கைத் துணையைப் பராமரிப்பவர்களுக்கு, விரும்பியபடி செலவழிப்பதற்கு நேரம் மிகவும் குறைவாக இருக்கலாம்.

நாம் வேலையில் இருந்தாலும் சரி, ஓய்வு பெற்றவராக இருந்தாலும் சரி, திருமணமானவராக இருந்தாலும் சரி, தனிமையில் இருந்தாலும் சரி, குழந்தைகளையோ அல்லது பிற குடும்ப உறுப்பினர்களையோ கவனித்துக் கொண்டாலும் சரி, நம்மை பராமரிப்பதற்கு நமது விருப்பப்படி சிறிது நேரம் தேவைப்படுகிறது. இறுதியில், நமது மதிப்புமிக்க நேரத்தை எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதைத் தேர்ந்தெடுக்கும் சுதந்திரத்தையும் பொறுப்பையும் கடவுள் நமக்குத் தருகிறார். நாம் வளர்ந்து வாழ்க்கையின் ஒவ்வொரு பருவத்தையும் அனுபவிக்கும்போது, நேரத்தை நாம்பயன்படுத்தும் விதம் மாறக்கூடும். நம்முடைய கண்ணோட்டமும் மாறக் கூடும். மேலும் அதன் வடிவமைப்பின் படி, நாம் யார் என்பதும் மாறுகிறது. உதாரணமாக, 6 1/2 அடி உயரத்தில் 300 பவுண்டு எடையில், ஐந்து வயதுள்ள மனதுடையவர், தனக்கும் தன்னைச் சுற்றியுள்ளவர்களுக்கும் ஆபத்தானதாக இருக்கலாம். வாழ்க்கையின் வசந்த காலத்தின் துவக்கத்தில், நாம் அவிக்குரிய குழந்தைகளாக இருக்கும் போது, கற்றுக்கொள்ள வேண்டிய ஆவிக்குரிய பாடங்கள் உள்ளன.

வசந்த காலத்தின் துவக்கத்தில், காற்றின் தட்பவெப்பநிலை வெப்பமடையத் தொடங்குகிறது, மேலும் குளிர்காலத்தின் உறக்கத்திலிருந்து புதிய வளர்ச்சி வெளிப்படுகிறது.

ஒரு குழந்தை பிறக்கும்போது, அது ஒரு உதவியற்ற உயிரினமாக காணப்படுகிறது. அதனால் நடக்கவோ பேசவோ முடியாது, அதன் கண்கள் எட்டு முதல் பதினைந்து அங்குல தூரத்தில் உள்ள பொருட்களை மட்டுமே பார்க்க முடியுது. குழந்தையின் கழுத்து

தசைகள் அதன் தலையைத் தாங்கும் அளவுக்கு இன்னும் வலுவாக இருக்காது, மேலும்ஜீவனுக்காக அது அதன் பெற்றோரைச் சார்ந்திருக்கும். ஒரு குழந்தை தொடர்ந்து உணவளிக்கப்பட்டு, குளித்து, உடை அணிய வேண்டும்.

ஒரு குழந்தை 100 பில்லியன் மூளை செல்களுடன் பிறக்கிறது, ஆனால் அந்த செல்களுக்கு இடையேயான தொடர்புகள், அதாவது சினாப்சஸ்( synapses) என்று அழைக்கப்படுப வைகள் இன்னும் முழுமையடையாதிருக்கிறது. குழந்தை வளரும் போது, தொடர்புகள் ஏற்படுத்தப்பட்டு, வளர்ச்சி ஏற்படுகிறது.

"இதோ, பிள்ளைகள் கர்த்தரால் வரும் சுதந்தரம், கர்ப்பத்தின் கனி அவரால் கிடைக்கும் பலன்." (சங்கீதம் 127:3)என்று சங்கீதக்காரன் பொருத்தமாகவே கூறுகிறார்.

**சிரிப்பு**



குழந்தைகள் சிரிப்பை ரசிப்பதாகத் தெரிகிறது. ஒரு குழந்தையைப் பார்த்து சிரிப்பது கூட அதை சிரிக்க வைக்கும். ஒரு குழந்தையின் சிரிப்பைக் கண்டால் சிரிக்காமல் இருக்க முடியாது.இந்த தொடர்பு மிகுந்த மகிழ்ச்சியைத் தருகிறது, மேலும் இருவரும் எளிதில் மகிழ்விக்கப்படுகிறார்கள்.நம்முடைய நாள் எவ்வளவு மோசமாகத் தோன்றினாலும், ஒரு குழந்தையின் சிரிப்பைக் காணும் போது நாம் சிரிக்கிறோம். இது நமது குழந்தைகள் மூலம் கடவுள் அளித்த மிகப்பெரிய பரிசுகளில் ஒன்றாகும். ஆவியால் பிறந்த புதிதாகப் பிரதிஷ்டை செய்யப்பட்ட பரிசுத்தவான்களுக்கு, கடவுள் தம்முடைய ஆவியால் தங்களை வழிநடத்துவதை உணரும்போது மிகுந்த மகிழ்ச்சி ஏற்படுகிறது. அவர்கள் தங்கள் மனதை (அவர்களின் பாசத்தை) பூமிக்குரியவற்றின் மீது அல்ல, மேலானவற்றின் மீது வைத்துள்ளனர். (கொலோசேயர் 3:2 ) அவர்கள் அப்போஸ்தலன் பவுலின் வழிகாட்டுதலை ஏற்றுக்கொள்கிறார்கள். "கர்த்தருக்குள் எப்பொழுதும் சந்தோஷமாயிருங்கள், சந்தோஷமாயிருங்கள் என்று மறுபடியும் சொல்லுகிறேன்." (பிலிப்பியர் 4:4) கிறிஸ்துவில் உள்ள குழந்தைகள் அவர்கள் மீது பொழியப்படும் கடவுளின் கிருபைக்கு - தங்களை தகுதியற்றவர்கள் என்பதை புரிந்து கொள்வார்கள். அவர்கள் ஈசாக்கின் மாதிரியாக, அற்புதக் குழந்தையாக, ஆபிரகாம் மற்றும் சாராவின் வாக்குத்தத்தம் செய்யப்பட்ட சந்ததியாகக் காட்டப்படுகிறார்கள். சாராளுடைய விஷயத்தில், 90 வயதில் தனக்கு ஒரு குழந்தை பிறக்கும் என்று தேவதூதன் சொன்னதைக் கேட்டபோது அவள் நம்பிக்கையில்லாமல் சிரித்தாள்.

ஆனால் அவள் மகனைப் பெற்றெடுத்தபோது, அவளுடைய அவநம்பிக்கையின் சிரிப்பு நம்பிக்கை நிறைந்த சிரிப்பாக மாறியது. அந்த நேரத்தில், ".. தேவன் என்னை நகைக்கப்பண்ணினார், இதைக் கேட்கிற யாவரும் என்னோடேகூட நகைப்பார்கள்.." என்று சொல்லும் போது, அவள் இருதயத்தில் கர்த்தருடைய மகிழ்ச்சி பொங்கி வழிந்தது. (ஆதியாகமம்21:6)

அவள் தன் கைகளில் ஒரு அதிசயக் குழந்தையை வைத்திருந்தாள், அது கர்த்தரிடமிருந்து வந்த பரிசு, கடவுள் சொன்னபடி, அவள் அவனுக்கு ஈசாக்கு என்று பெயரிட்டாள். அதற்கு சிரிப்பு என்று அர்த்தம்.

**ஒரு புது சிருஷ்டி**

ஒரு குழந்தை பிறக்கும்போது, பெற்றொர்கள் கடவுள் கொடுத்த புதிய குழந்தையை மிகவும் நேசிக்கிறார்கள். அதன் வளர்ச்சி இப்போது

அவர்களின் பொறுப்பில் உள்ளது. அதேபோல், கிறிஸ்துவுக்குள்ளான விசுவாசி ஒருவர் கடவுளின் இரக்கங்களால் தங்கள் அனைத்தையும் கடவுளுக்கு அர்ப்பணித்து, தங்கள் சரீரங்களை கடவுளுக்குப் பிரியமான ஜீவனும் பரிசுத்தமுமான பலியாக ஒப்புக்கொடுக்கும் போது, கடவுள் அந்த விசுவாசியை தம்முடைய பரிசுத்த ஆவியினால் ஜெநிப்பிக்கிறார். (1யோவான்4:13 )இவர்களை குறித்து பவுல் இவ்வாறு கூறுகிறார் - "இப்படியிருக்க, ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால் புதுச்சிஷ்டியாயிருக்கிறான், பழையவைகள் ஒழிந்து போயின, எல்லாம் புதிதாயின"(2கொரிந்தியர் 5:17)நமது பரலோகத் தந்தை நமக்கு ஜீவனை கொடுப்பவர்கள், ஜெபம் நமது உயிர்நாடி. "பிதா தாமே நம்மை நேசிக்கிறார்" என்று இயேசு கூறுகிறார். (யோவான் 16:27)

அப்போஸ்தலன் பவுல் நமக்கு இவ்வாறு உறுதியளிக்கிறார் - "நான் உங்களை நினைக்கிறபொழுதெல்லாம் என் தேவனை ஸ்தோத்திரிக்கிறேன்" (பிலிப்பியர் 1:6) இயேசுவின் ஏற்பாட்டின் மூலம் மட்டுமே கிறிஸ்துவை விசுவாசிகளுக்கு பரிசுத்த ஆவியின் ஜெநிப்பிக்கப்படுதலை அடைய முடியும், இதன் மூலம் நாம் கடவுளின் குந்தைகளாக மாறுகிறேம். (1பேதுரு1:3 )

"என்னில் நிலைத்திருங்கள், நானும் உங்களில் நிலைத்திருப்பேன், கொடியானது திராட்சச் செடியில் நிலைத்திராவிட்டால் அது தானாய்க் கனிகொடுக்கமாட்டாதது போல, நீங்களும் என்னில் நிலைத்திராவிட்டால், கனிகொடுக்கமாட்டீர்கள். நானே திராட்சச்செடி, நீங்கள் கொடிகள். ஒருவன் என்னிலும் நான் அவனிலும் நிலைத்திருந்தால், அவன் மிகுந்த கனிகளைக் கொடுப்பான், என்னையல்லாமல் உங்களால் ஒன்று செய்யக்கூடாது" என்று இயேசு கூறுகிறார். (யோவான் 15:4 5)

கிறிஸ்துவின் பலியின் புண்ணியத்தின் மூலம், நாம் இந்தப் புதிதும் ஜீவனுமான வழியில், மாம்சத்தின்படி அல்ல, ஆவியின்படி நடக்க முடியும். (யோவான் 1:12; எபிரெயர் 10:20; ரோமர் 8:1-17 ) கிறிஸ்துவுக்குள் புதிதாகப் பிரதிஷ்டை செய்யப்பட்ட பரிசுத்தவான்களைப் புதிதாகப் பிறந்த குழந்தைகளுடனும், கடவுளுடைய வார்த்தையை சுத்தமான பாலுடனும் அப்போஸ்தலன் பேதுரு ஒப்பிடுகிறார். "இப்படியிருக்க, கர்த்தர் தயையுள்ளவரென்பதை நீங்கள் ருசிபார்த்ததுண்டானால், சகல துர்க்குணத்தையும், சகலவித கபடத்தையும், வஞ்சகங்களையும் பொறாமைகளையும், சகலவித புறங்கூறுதலையும் ஒழித்துவிட்டு, நீங்கள் வளரும்படி, புதிதாய்ப் பிறந்த குழந்தைகளைப்போல, திருவசனமாகிய களங்கமில்லாத ஞானப்பாலின்மேல் வாஞ்சையாயிருங்கள். (1பேதுரு 2:1 2)

அப்போஸ்தலன் பேதுரு, சில புதிய கிறிஸ்தவர்கள் தங்கள் இருதயங்களிலிருந்தும் மனதிலிருந்தும் பாவ நோய்கள் மற்றும் தீமை, வஞ்சகம், பாசாங்குத்தனம், பொறாமை மற்றும் அவதூறு ஆகியவற்றின் ஊழல்களை அகற்ற போராடுவதைக் கவனித்ததாகத் தெரிகிறது.

அவர்களுடைய இருதயங்களையும் மனதையும் தேவனுடைய தூய வார்த்தையால் நிரப்ப வேண்டும் என்பதே பேதுரு அவர்களுக்குக் கொடுத்த கட்டளையாகும். தாய்ப்பாலானது ஒரு குழந்தைக்கு, குறிப்பாக குழந்தையின் வளரும் மூளைக்கு மிகவும் ஊட்டமளிக்கிறது. இது குழந்தையின் வயிற்றை நிரப்பும் இனிப்பாகும். எனவே, குழந்தை பசி எடுக்கும் போதெல்லாம், அது தனது தாயின் பாலுக்காக மிகவும் ஏங்குகிறது , இந்த இயற்கை செயல்முறை வளர்ச்சியை துரிதப்படுத்துகிறது.

அப்படியிருந்தும், கிறிஸ்துவின் போதனைகளின் அடிப்படைக் கொள்கைகள் - ஆவிக்குரிய ஊட்டமளிப்பதே, புது சிருஷ்டிகளின் வளர்ச்சிக்கு அவசியமானது.இப்படியாக ஆவிக்குரிய விதமான வார்த்தைகளை உண்பது மகிழ்ச்சியாக மாறும் ! "பாலுண்கிறவன் குழந்தையாயிருக்கிறபடியினாலே நீதியின் வசனத்தில்

பழக்கமில்லாதவனாயிருக்கிறான்" என்று அப்போஸ்தலன் பவுல் கூறுகிறார். (எபிரெயர் 5:13)

**கற்றல்**

குழந்தைகள் நடக்கத் தொடங்குவதற்கு முன்பு தவழ்ந்து செல்லக் கற்றுக்கொள்வது போல, புது சிருஷ்டிகள் கிறிஸ்துவின் அடிப்படைக் கொள்கைகளில் உள்ள உண்மைகளைப் பழக்கப்படுத்திக் கொள்ளவும், அவற்றைப் பயிற்சி செய்யவும் நேரம் எடுக்கும்.

இந்தக் கொள்கைகளில் சில பின்வருமாறு -

● கடவுளையும், கிறிஸ்துவுக்குள் உங்கள் சகோதர சகோதரிகளையும் உங்கள் அண்டை வீட்டாரையும், உங்கள் எதிரிகளையும் கூட நேசியுங்கள்.

● மனுஷகுமாரன் மனுஷருடைய ஜீவனை அழிக்க வராமல், அவர்களை இரட்சிக்கவே வந்தர்.

● விசுவாசம் கேட்பதின் மூலம் வருகிறது, கேட்பது கிறிஸ்துவின் வார்த்தையின் மூலம் வருகிறது.

● விசுவாசம் இல்லாமல், கடவுளைப் பிரியப்படுத்துவது கூடாத காரியம்.

● விழித்திருந்து ஜெபியுங்கள்.

● பாவத்தை அடையாளம் கண்டு, கடவுளிடமும் நீதியிடமும் திரும்ப வேண்டிய அவசியம்.

● நீதியை நேசித்து, அக்கிரமத்தை வெறுக்கவேண்டும்.

● ஜீவனுள்ள தேவனுடைய குமாரன் இயேசு மாம்சத்தில் வந்தார், (யோவான் 1:14; மத்தேயு16:16)

● இயேசு சிலுவையில் அனைவருக்கும் மீட்கும் பலியாக மரித்தார் - நம்முடைய பாவங்களுக்காகவும், முழு உலகத்தின் பாவங்களுக்காகவும்.

● கடவுள் இயேசுவை மூன்றாம் நாளில் மரித்தோரிலிருந்து எழுப்பினர்.

● " ஞானஸ்நானம் என்பது கடவுளுக்காக நாம் மரண பரியந்தம் அர்ப்பணிக்கப்படுவதன் அடையாளமாகும்.

● மரணம் என்பது ஜீவனற்ற நிலை. "செய்யும்படி உன் கைக்கு நேரிடுகிறது எதுவோ, அதை உன் பெலத்தோடே செய், நீ போகிற பாதாளத்திலே செய்கையும் வித்தையும் அறிவும் ஞானமும் இல்லையே." (பிரசங்கி 9:10)

● கிறிஸ்துவின் திருச்சபையாகிய சிறு மந்தை, பரலோகத்தில் தெய்வீக இயல்புக்கும், மனுக்குலத்தின் உலகம், பூமியில் மனித இயல்புக்கும் (என்றென்றும் வாழும் வாய்ப்புடன்) உயிர்த்தெழுப்பப்படும்.

● கிறிஸ்துவின் இராஜ்யத்தில் உலகமெல்லாம்



கடவுளை அறிந்து கொள்ளும் ஏனெனில், "சமுத்திரம் ஜலத்தினால் நிறைந்திருக்கிறதுபோல், பூமிய கர்த்தரை அறிகிற அறிவினால் நிறைந்திருக்கும்" (ஏசாயா 11:9)

ஆஸ்திரேலியாவின் "குழந்தைகள், இளைஞர்கள் மற்றும் பெண்கள் சுகாதர சேவையில் "வெவ்வேறு வயதினருக்கான ஒழுக்கம்" என்ற தலைப்பிலான ஒரு கட்டுரையில், "ஒழுக்கம்" என்பது கற்பித்தல் மற்றும் கற்றல் பற்றியது என்று கூறுகிறது. "உங்கள் குந்தையின் வயதைக் கருத்தில் கொண்டு, அவர்களின் தேவைகளைப் புரிந்துகொண்டு, இதை அடைவதற்கான சிறந்த வழியைப் பற்றி சிந்திக்க" பெற்றோருக்கு இது அறிவுறுத்துகிறது. இந்த வகையான ஒழுக்கத்தை தான் பரலோகத்தின் தேவன் நம் ஒவ்வொருவருக்கும் செய்கிறார். நமது

சிறந்த ஆவிக்குரிய வளர்ச்சிக்காக அவர் நமது வாழ்க்கை அனுபவங்களை வடிவமைக்கிறார். இந்த ஞானமான வார்த்தைகளைக் கவனியுங்கள், "உன் செய்கைகளைக் கர்த்தருக்கு ஒப்புவி, அப்பொழுது உன் யோசனைகள் உறுதிப்படும். கர்த்தர் சகலத்தையும் தமக்கென்று படைத்தார்." (நீதிமொழிகள் 16:3, 4) கூடுதலாக, "மனுஷருடைய இருதயம் அவனுடைய வழியை யோசிக்கும், அவனுடைய நடைகளை உறுதிப்படுத்துகிறவரோ கர்த்தர். " (நீதிமொழிகள; 16:9) ஒரு சீஷர் இயேசுவிடம் ஜெபிக்கக் கற்றுக்கொடுக்கும்படி கேட்டபோது, இயேசு ஒரு மாதிரி ஜெபத்தைக் கற்றுக்கொடுத்தார். பின்னர், அவர்கள் முன்னிலையில், இயேசு தம்முடைய பரலோகத் தந்தையிடம் ஜெபித்தார்."அந்தச் சமயத்திலே இயேசு சொன்னது - பிதாவே, வானத்துக்கும் பூமிக்கும் ஆண்டவரே, இவைகளை ஞானிகளுக்கும் கல்விமான்களுக்கும் மறைத்து, பாலகருக்கு வெளிப்படுத்தினபடியால் உம்மை ஸ்தோத்திரிக்கிறேன். ஆம், பிதாவே, இப்படிச் செய்வது உம்முடைய திருவுளத்துக்குப் பிரியமாயிருந்தது." (மத்தேயு11:25 26)

புதிதாகப் பிறந்த குழந்தையின் வளர்ச்சியில் தொடுதல் மிக அவசியம், எனவே ஒரு குந்தையை தொடர்ந்து தூக்கி ஆறுதல்படுத்த வேண்டும். ஒரு வயது வரையிலான குழந்தைகளுக்கு, பெற்றோரின் மென்மை, அன்பான தொடுதல்கள் மற்றும் வார்த்தைகள் அவர்களின் வளர்ச்சிக்கு உணவளிப்பது மற்றும் உடை அணிவது போலவே முக்கியமானது. இந்த அன்பான தெடர்புகள் மூலம், குழந்தைகள் தாங்கள் பாதுகாக்கப்படுவதைக் கற்றுக்கொள்கிறார்கள். அவர்கள் தங்கள் பெற்றோரை நம்பக் கற்றுக்கொள்கிறர்கள்.

இதேபோல், கடவுள் கிறிஸ்துவில் உள்ள ஒவ்வொரு புது சிருஷ்டிக்குள்ளும் நம்பிக்கையையும் விசுவாசத்தையும் வளர்க்கிறார். அவர் அவர்களின் ஜெபங்களுக்கு பதிலளித்து, தனது மென்மையான பாதுகாப்பை வெளிப்படுத்துகிறார். மேலும் இயேசுவும் மென்மையாக நமக்கு அறிவுறுத்துகிறார். "நான் சாந்தமும் மனத்தாழ்மையுமாய் இருக்கிறேன், என் நுகத்தை உங்கள் மேல் ஏற்றுக்கொண்டு, என்னிடத்தில் கற்றுக்கொள்ளுங்கள்..." (மத்தேயு11:29)

ஒரு வயது முதல் மூன்று வயது வரையிலான குழந்தைகள் ஜீவனும் ஆர்வமும் நிறைந்தவர்களாக இருப்பார்கள். அவர்கள் தொடுதல் மூலம், புதிய விஷயங்களை கற்றுக்கொள்ள முயற்சி செய்கிறார்கள். இந்த வளர்ச்சி செயல்பாட்டில், பெரும்பாலும் மோசமான விஷயங்களைச் செய்வது அல்லது பொருட்களை தவறாகப் பயன்படுத்துவதும் உள்ளடக்குகிறது. குழந்தைகள் தாங்களாகவே காரியங்களைச் செய்ய விரும்புகிறார்கள், மேலும் அவர்கள் தனித்தனி நபர்களாக மாறக் கற்றுக் கொள்ளும்போது அடிக்கடி "இல்லை" என்று உறுதியாகச் சொல்வார்கள்.குழந்தைகள் தங்களால் முடிந்ததை விட அதிகமாகச் செய்ய விரும்பும் போது பெரும்பாலும் விரக்தியடைகிறார்கள்! இது இளம் குழந்தைகளைக் கொண்ட பெற்றோருக்கு நன்கு தெரிந்திருக்கலாம், ஆனால் இது ஆவிக்குரிய



மட்டத்திலும் பொருந்தும்.

### தவறுதலினால் கற்றல்

ஒரு இளம் குழந்தையைக் கற்பிக்கையில், ஒரு ஞானமுள்ள பெற்றோர்

பொறுமையுடனும் பராட்டுடனும் குழந்தைக்குப் புதிய திறமைகளைக் காண்பிப்பார்கள். இதற்கு ஒரு சிறந்த உதாரணம், 2 வது ஹெல்பிங் ஆ.:.ப் சிக்கன் சூப் :.பார் தி சோலில் (2nd Helping of Chicken Soup for the Soul.) காணப்படும் ஒரு கதையில் விவரிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கதை, மருத்துவத்தில் பல குறிப்பிடத்தக்க முன்னேற்றங்களைச் செய்த ஒரு பிரபல ஆராய்ச்சி விஞ்ஞானியைப் பற்றியது. ஒரு செய்தித்தாள் நிருபர் அவரைப் பேட்டி கண்டு, சராசரி மனிதனை விட அவரால் எப்படி இவ்வளவு படைப்பாற்றல் மிக்கவராக இருக்க முடிகிறது என்று நினைக்கிறீர்கள் என்று கேட்டார். மற்றவர்களிடமிருந்து அவரை இவ்வளவு தனித்து நிறுத்தியது எது?

அவரது கருத்துப்படி, இவை அனைத்தும் அவருக்கு இரண்டு வயதாக இருந்தபோது ஏற்பட்ட தனது தாயாருடனான அனுபவத்திலிருந்து வந்தது என்று அவரது கருத்தின் படி பதில் அளித்தார். அவர் குளிர்சாதன பெட்டியிலிருந்து ஒரு பால் பாட்டிலை எடுக்க முயன்றபோது, வழுக்கும் பாட்டிலின் பிடியை இழந்து, அது கீழே விழுந்து, அதன் உள்ளடக்கங்கள் சமையலறைத் தளம் முழுவதும் சிதறின - உண்மையிலேயே தரை, பால் கடலானது!

அவன் அம்மா சமையலறைக்குள் வந்தபோது, அவனைக் கத்துவதற்குப் பதிலாக, அதாவது அவனுக்கு ஒரு சொற்பொழிவு ஆற்றுவதற்குப் பதிலாக, அல்லது அவனைத் தண்டிப்பதற்குப் பதிலாக, " ராபர்ட், நீ எவ்வளவு பெரிய, அற்புதமான குழப்பத்தை ஏற்படுத்திவிட்டாய், இவ்வளவு பெரிய பால் குட்டையை நான் அரிதாகவே பார்த்திருக்கிறேன். சரி, சேதம் ஏற்கனவே நடந்துவிட்டது, நாம் அதை சுத்தம் செய்வதற்கு முன்பு நீங்கள் கீழே இறங்கி சில நிமிடங்கள் பாலில் விளையாட விரும்புகிறீர்களா ?" என்று அவள் அவனிடம் கேட்டாள்.

நிச்சயமாக, அவர் செய்தார், சில நிமிடங்களுக்குப் பிறகு,"உனக்குத் தெரியும், ராபர்ட், நீ இது போன்ற ஒரு குழப்பத்தை ஏற்படுத்தும் போதெல்லாம், இறுதியில் அதைச் சுத்தம் செய்து எல்லாவற்றையும் அதன் சரியான வரிசையில் மீட்டெடுக்க வேண்டும்." என்று அவரது தாயார் கூறினார்.

சரி, நீங்கள் அதை எப்படி செய்ய விரும்புகிறீர்கள் ? நாம் ஒரு பஞ்சு, ஒரு துண்டு அல்லது ஒரு துடைப்பான் பயன்படுத்தலாம். உங்களுக்கு எது பிடிக்கும் ? "அவர் பஞ்சைத் தேர்ந்தெடுத்தார், இருவரும் சேர்ந்து சிந்திய பாலை சுத்தம் செய்தனர். "உங்களுக்குத் தெரியும், இரண்டு சிறிய கைகளால் ஒரு பெரிய பால் பாட்டிலை திறம்பட எடுத்துச் செல்வதில் நாம் தோல்வியடைந்த பரிசோதனையை இங்கே பெற்றுள்ளோம்." "வா, பின்பக்க முற்றத்துக்குப் போய், பாட்டிலில் தண்ணீர் நிரப்பி, கீழே போடாமல் எடுத்துச் செல்வதற்கான வழியைக் கண்டுபிக்க முடியுமா என்று பார்ப்போம்." என்று அவரது தாயார் கூறினார். அந்தச் சிறுவன், மேல் பகுதியில் உள்ள பாட்டிலை இரண்டு கைகளாலும் பிடித்துக் கொண்டால், கீழே போடாமல் அதை எடுத்துச் செல்ல முடியும் என்பதைக் கற்றுக்கொண்டான். என்ன ஒரு அற்புதமான பாடம்!

அந்த நேரத்தில் தான் தவறுகளைச் செய்ய பயப்படத் தேவையில்லை என்பதை உணர்ந்ததாக இந்தப் புகழ்பெற்ற விஞ்ஞானி குறிப்பிட்டார். அதற்கு பதிலாக, தவறுகள் என்பது புதிதாக ஒன்றைக் கற்றுக் கொள்வதற்கான வாய்ப்புகள் மட்டுமே என்பதை அவர் கற்றுக் கொண்டார், எல்லாவற்றிற்கும் மேலாக, அறிவியல் பரிசோதனைகள் இதே போல செய்யப்படுகிறது. சோதனை "வேலை செய்யவில்லை" என்றாலும் நாம் பொதுவாக அதிலிருந்து மதிப்புமிக்க ஏதோ ஒன்றைக் கற்றுக்கொள்கிறோம்.

குழந்தைக்கு இது ஒரு சிறந்த பாடமாகும், ஆனால் இது பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளின் வாழ்க்கையில் பொறுமையைக் காட்டுவதற்கான, நீண்டகால செயல்திறனுக்கான மற்றும் ஓர் பெரிய பாடமாக உள்ளது! கடவுளின் பிள்ளைகளுக்கு,

"நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால், பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மைச் சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியும் உள்ளவராயிருக்கிறார்." (1யோவான் 1 : 9)

**கற்கக்கூடிய பாடங்கள்**



யோவான் இதை உறுதிப்படுத்துகிறார் - "என் பிள்ளைகளே, நீங்கள் பாவஞ்செய்யாதபடிக்கு இவைகளை உங்களுக்கு எழுதுகிறேன், ஒருவன் பாவஞ்செய்வானானால் நீதிபரராயிருக்கிற இயேசுகிறிஸ்து நமக்காகப் பிதாவினிடத்தில் பரிந்து பேசுகிறவராயிருக்கிறார்." (1யோவான் 2:1)

பெற்றோர்கள் இளம் குழந்தைகளுக்கு எளிமையாக கற்பிக்க வேண்டும். அதாவது " ஒரு நேரத்தில் ஒரு பாடமாக" கற்பிக்கவேண்டும். புது திறமையைக் கற்பிக்க அல்லது கற்றுக்கொள்ள முயற்சிக்கும் எவருக்கும், குறிப்பாக கிறிஸ்துவில் புது சிருஷ்டிகள் கடவுள் கிறிஸ்துவைப் போன்ற குணத்தை வளர்த்துக் கொள்வதற்கான பாடங்களைக் கற்றுக் கொள்பவர்களுக்கு இது சரியான அறிவுரையாகும். தங்கள் குழந்தைகள் ஆபத்தில் இருக்கும்போது பெற்றோர்கள் அவர்களை பாதுகாப்பாக அழைத்துச் செல்கிறார்கள். கிறிஸ்துவுக்குள் இருக்கும் ஆவிக்குரிய குழந்தைகளைப் பொறுத்தவரை, கர்ஜிக்கும் சிங்கத்தைப் போல,சத்துருவானவன், இந்தப் புதிதாகப் பிரதிஷ்டை செய்த பாிசுத்தவான்களை எளிதில் காயப்படுத்தக்கூடியவனாக காணலாம்.

எல்லா ஆடுகளும் (முதுமையான கிறிஸ்தவ வீரர்கள் கூட) இரையாகக் காணப்பட்டாலும், ஆபத்தைத் தவிர்க்க நாம் நம்மால் முடிந்த அனைத்தையும் செய்ய வேண்டும்.சத்துருவானவன் நமது பயங்களைப் பயன்படுத்திக் கொள்ளும்போது, அப்போஸ்தலன் பேதுரு நம்மை இவ்வாறு ஊக்குவிக்கிறார் - "ஆகையால், ஏற்றகாலத்திலே தேவன் உங்களை உயர்த்தும்படிக்கு, அவருடைய பலத்த கைக்குள் அடங்கியிருங்கள். அவர் உங்களை விசாரிக்கிறவரானபடியால், உங்கள் கவலைகளையெல்லாம் அவர் மேல் வைத்துவிடுங்கள் தெளிந்த புத்தியுள்ளவர்களாயிருங்கள், விழித்திருங்கள், ஏனெனில், உங்கள் எதிராளியாகிய பிசாசானவன் கெர்ச்சிக்கிற சிங்கம்போல் எவனை விழுங்கலாமோ என்று வகைதேடிச் சுற்றித்திரிகிறான்."(1பேதுரு 5:6-8)

கடவுளின் பிள்ளைகள் ஆபத்தில் இருக்கும்போது, அவர்கள் ஜெபத்தை உயிர்காக்கும் ஆயுதமாகப் பயன்படுத்த வேண்டும். நம் பரலோகத் தந்தை அனைவரையும் பாதுகாப்பாக உயர்த்தத் தயாராக இருக்கிறார். மேலும் இத்தகைய சூழ்நிலையில் முதிர்ச்சியடைந்த பரிசுத்தவான்களும் உதவி வழங்கும் பொறுப்பில் உள்ளனர். இயேசு நம் அனைவருக்கும் அறிவுரை இவ்வாறு கூறுகிறார், "இந்தச் சிறியரில் ஒருவனையும் அற்பமாய் எண்ணாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள், அவர்களுக்குரிய தேவதூதர்கள் பரலோகத்திலே என் பரமபிதாவின் சமுகத்தை எப்போதும் தரிசிக்கிறார்கள் என்று உங்களுக்குச்

சொல்லுகிறேன்." (மத்தேயு18:10)

**முடிவுரை**

புதிய சிருஷ்டிகளின் ஆரம்ப வளர்ச்சியைக் காட்டும் இந்த ஆவிக்குரிய வாழ்க்கையின் முதல் பருவத்தைக் கருத்தில் கொள்ளும்போது, அற்புதமான வாழக்கையை, குறிப்பாக கடவுள் தொடங்கிய புதிய சிருஷ்டிகளின் வாழ்க்கையைப் பாராட்டுவோம். கிறிஸ்துவுக்குள் அவருடைய ஆவிக்குரிய குழந்தைகளை வள்ப்பதைக் கெண்டாடுவோம்.

● பரிசுத்த வேதாகமத்தின் அடிப்படை சத்தியங்களை நாம் கட்டியெழுப்பி, அவற்றில் மகிழ்ச்சி அடைவோம்.

● நம் நேரத்தை கடவுளை மகிமைப்படுத்தப் பயன்படுத்துவோம்.

● குழந்தைத்தனமான விசுவாசத்தையும் கடவுள் மீது நம்பிக்கையையும் வளர்த்துக் கொள்வோம்.

● நம் தவறுகளிலிருந்து கற்றுக்கொள்வோம், சிரிக்கவும் கர்த்தருடைய மகிழ்ச்சியைப் பகிர்ந்து கொள்ளவும் நினைவில் கொள்வோம்.

● கடவுள் ஒழுக்கத்தைப் பயன்படுத்தும்போது, அதைத் தம்முடைய பிள்ளைகளில் நீதியான குணத்தை வளார்ப்பதற்கான பயிற்சியாகக் கருதுவோம்.

நாம் வேத வசனங்களை படிப்பதற்கு தொடர்ந்து கேள்விகள் கேட்போம். கடவுளின் எந்த விசுவாசமுள்ள பிள்ளையையும் இளம் வயதிலேயே கூட, அவரால் பயன்படுத்த முடியும். மற்றொருவரின் சுமையை இலகுவாக்கும் எந்த கடவுளின் குழந்தையும் பயனுள்ளவர்களாக இருக்கிறார்கள்.

## வளரும் கோதுமை

# கிறிஸ்துவில் இளமைப் பருவம்

**James Strong and John McClintock**



— Ken Allison

"அறுப்புக்காலத்தில் நான் அறுக்கிறவர்களை நோக்கி - முதலாவது, களைகளைப் பிடுங்கி, அவைகளைச் சுட்டெரிக்கிறதற்குக் கட்டுகளாகக் கட்டுங்கள், கோதுமையையோ என் களஞ்சியத்தில் சேர்த்துவையுங்கள் என்பேன் என்று சொன்னான் என்றார்." (மத்தேயு13:30)

கடவுளின் படைப்பில் காணப்படும் ஞானம் பெரும்பாலும் கிறிஸ்து இயேசுவில் நமது ஆவிக்குரிய வளர்ச்சியின் ஆழமான உண்மைகளை பிரதிபலிக்கிறது. விசுவாசிகளாக, நம்முடைய பயணம் இயற்கையில் காணப்படும் வடிவங்களைப் பிரதிபலிக்கிறது, வளர்ச்சியின் பருவங்கள், கவனமாக வளர்ப்பதன் அவசியம் மற்றும் ஆவிக்குரிய முதிர்ச்சியின் வாக்குறுதியைப் பற்றிய நுண்ணறிவை வழங்குகிறது. "ஒவ்வொன்றிற்கும் ஒவ்வொரு காலமுண்டு, வானத்தின் கீழிருக்கிற ஒவ்வொரு காரியத்துக்கும் ஒவ்வொரு சமயமுண்டு." (பிரசங்கி 3:1) என்று பிரசங்கி சரியாகவே அறிவித்தார்.

கர்த்தருடனான நமது நடைப்பயணம் அத்தகைய பருவங்கள் வழியாக வெளிப்படுகிறது, ஒவ்வொன்றும் தனித்துவமான சவால்களை முன்வைக்கின்றன, இதற்கு குறிப்பிட்ட போஷிப்பு தேவைப்படுகின்றன, மேலும் கடவுளின் வடிவமைப்பின்படி மனம் மாற்றத்திற்கான வாய்ப்புகளை வைத்திருக்கின்றன.இந்தப் பயணம் செயலற்ற தன்மையுடையது அல்ல, மாறாக கடவுள் நமக்குள் நிறைவேற்ற விரும்பும் வேலைக்கு விடாமுயற்சி, விசுவாசம் மற்றும் தயார்நிலை ஆகியவற்றைக் கோரும் ஒரு மாற்று செயல் முறையாகும்.

கோதுமையின் வாழ்க்கைச் சுழற்சியைக் கவனியுங்கள். வசந்த காலத்தில் விதைக்கப்படும், அறுவடைக்குத் தயாராகும் முன் பல மாதங்களுக்கு முதிர்ச்சியடைய சூரிய ஒளி, தண்ணீர் மற்றும் வளமான மண் போன்ற நிலையான வளர்ப்பு நிலைமைகள் தேவை.இந்த இயற்கையான முன்னேற்றம் ஆவிக்குரிய வளார்ச்சிக்கு, குறிப்பாக இளமைப் பருவத்தின் வளர்ச்சி ஆண்டுகளில் பொருத்தமான ஒப்புமையை வழங்குகிறது. இந்தக் கட்டத்தில், இளம் சகோதரர்கள் கோதுமையின் மென்மையான தளிர்களைப் போன்றவர்கள் - கடவுள் கொடுத்த ஆற்றல் நிறைந்தவர்கள், ஆனால் உலகின் கடுமையான சக்திகளுக்கும் எதிரியின் சூழ்ச்சிகளுக்கும் ஆளாகக்கூடியவார்களாகவும் இருக்கிறார்கள். ஒரு உண்மையுள்ள விவசாயி தனது பயிரை விடாமுயற்சியுடன் பராமாரிப்பது போல, வழிகாட்டிகளும், மூத்த சகோதரர்களும் நம் இளைஞர்களுக்குள் இந்த விலைமதிப்பற்ற நம்பிக்கையின் கோதுமையை வளர்க்கும் பொறுப்பை ஏற்றுக்கொண்டு, அவர்கள் நீதியை நோக்கி வளர தேவையான ஆவிக்குரிய ஊட்டச்சத்தை வழங்க வேண்டும்.

### விசுவாசத்தின் கோதுமை

என்பதை அறிந்திருப்பதால், பயனுள்ள அல்லது அங்கீகாரத்திற்கான நமது ஆசைகள் நிறைவேறாமல் போகலாம். நாம் அவருடைய அருளில் திருப்தியடைந்து, விடாமுயற்சியுடனும், விழிப்புடனும், அதே நேரத்தில் பொறுமையுடனும், அவருடைய நேரத்திற்காகக் காத்திருக்க விருப்பத்துடனும் இருக்க வேண்டும். "அவர்கள் நின்று காத்திருப்பவர்களுக்கும் சேவை செய்கிறார்கள்." என்று கவிஞர் மில்டன் எழுதியிருக்கிறார். கடவுளின் சொந்த நேரத்தில், அவர் தம்முடைய கிருபையின் நோக்கங்களை நிறைவேற்ற நம்மை வழிநடத்துவார்.

## விசுவாசமும் கிரியைகளும்- தொடரும் பயணம்

"உனக்கு விசுவாசமுண்டு, எனக்குக் கிரியைகளுண்டு, கிரியைகளில்லாமல் உன் விசுவாசத்தை எனக்குக் காண்பி, நான் என் விசுவாசத்தை என் கிரியைகளினாலே உனக்குக் காண்பிப்பேன் என்பானே." (யாக்கோபு 2:18) என்று யாக்கோபு நமக்கு நினைப்பூட்டுகிறார்.

புது சிருஷ்டிப்பின் இலையுதிர் காலம் என்பது கடந்த கால சாதனைகளில் ஓய்வெடுக்கும் நேரம் அல்ல, மாறாக குறுகிய பாதையில் தொடர்ந்து சென்று, கிறிஸ்துவின் பாடுகளில் குறைவானதை நிரப்பி, மாம்சத்திற்கு தினமும் மரிக்கும் நேரமாகும். "நாம் காலாவதியாகும் முன் ஊக்கமளிக்க விரும்புங்கள்" என்ற ஒரு சொற்றொடரில், குறிக்கோள், பின்தொடர்பவர்களுக்கு நம்பிக்கை, அன்பு மற்றும் சேவையின் மரபை விட்டுச் செல்ல வேண்டும்.

## இலையுதிர் காலத்திற்கான நடைமுறை சிந்தனைகள்

● **வரம்புகளை கருணையுடன் தழுவுங்கள்.** உடல் ரீதியான சரிவு தவிர்க்க முடியாதது, ஆனால் அதில் எஞ்சியிருப்பதற்கு நன்றியுணர்வுடனும், உண்மையிலேயே முக்கியமானவற்றில் கவனம் செலுத்துவதன் மூலமும் அன்பு மற்றும் சேவையில் ஆவிக்குரிய வளர்ச்சியைச் சந்திக்க முடியும் - இப்படி நாம் அழகாக முதுமை அடையலாம்.

● **சிந்தித்து மறுபரிசீலனை செய்யுங்கள்.** உங்கள் இருதயத்தையும் நோக்கங்களையும் தவறாமல் சோதித்துப் பாருங்கள். நாம் கடவுளை சேவிக்கிறோமா அல்லது உலக பொருட்களை சேவிக்கிறோமா ? அறிக்கையிட்டு சுத்திகரிக்கப்பட வேண்டிய "இரகசிய தவறுகள்" ஏதேனும் உள்ளதா ?

● **ஈடுபாட்டுடன் இருங்கள்.** உங்கள் திறமைகள் எவ்வளவு குறைவாக இருந்தாலும், கர்த்தருடைய சேவையில் பயன்படுத்துங்கள். ஆவியால் பிறந்தவரின் வாழ்க்கையில் ஓய்வு இல்லை. ஒவ்வொரு பருவமும் கடவுளை மகிமைப்படுத்த வாய்ப்பகளை வழங்குகிறது.

● **ஆவியின் கனியை வளர்த்துக் கொள்ளுங்கள்.** அன்பு, பொறுமை, தயவு மற்றும் விசுவாசத்தின் மீது கவனம் செலுத்துங்கள். இவை முதிர்ச்சியின் அடையாளங்களாகவும், பரிசுத்த ஆவியின் உள்ளே இருக்கும் செயலின் சான்றாகவும் உள்ளன.

● **கடவுளின் நேரத்தை நம்புங்கள்.** கடவுள் நம்மை எங்கு வைத்திருக்கிறார் என்பதில் திருப்தி அடையுங்கள். எது சிறந்தது என்பதை அவர் அறிவார், மேலும் அவருடைய நோக்கத்தின்படி நம்மைப் பயன்படுத்துவார்.

● **ஒரு முன்மாதிரியாக இருங்கள்.** உங்கள் வார்த்தைகளும் செயல்களும் உங்கள் இருதயத்தின் நன்மையையும், கடவுளின் சித்தத்திற்கு இணங்குவதையும் பிரதிபலிக்கட்டும், கர்த்தரைத் தேடும் அல்லது குறுகிய பாதையில் போராடும் மற்றவர்களை ஊக்குவிக்கட்டும்.

# குளிர்காலம்
## கடவுளின் சபைகளில் செழித்து வளர்தல்



— Todd Alexander

"நீதிமான் பனையைப்போல் செழித்து, லீபனோனிலுள்ள கேதுருவைப்போல் வளருவான். கர்த்தருடைய ஆலயத்திலே நாட்டப்பட்டவர்கள் எங்கள் தேவனுடைய பிராகாரங்களில் செழித்திருப்பார்கள். கர்த்தர் உத்தமரென்றும், என் கன்மலையாகிய அவரிடத்தில் அநீதியில்லையென்றும் விளங்கப்பண்ணும்படி, அவர்கள் முதிர்வயதிலும் கனி தந்து, புஷ்டியும் பசுமையுமாயிருப்பார்கள்." (சங்கீதம் 92:12-15)

கர்த்தருக்குக் கீழ்ப்படிதலில் வேரூன்றிய வாழ்க்கை நீடித்த ஆவிக்குரிய வலிமைக்கு வழிவகுக்கிறது என்பதை சங்கீதக்காரர் வெளிப்படுத்துகிறார். வாழ்க்கையின் இறுதிப் பருவமான "குளிர்காலம்" வீழ்ச்சிக்கானது அல்ல, மாறாக செழிப்பு, தொடர்ச்சியான வளர்ச்சி, பலன் மற்றும் கடவுளின் நீதியைப் பகிர்ந்து கொள்வதற்கான ஏராளமான ஆற்றலைக் கொண்டுள்ளது என்று அவர் நமக்கு உறுதியளிக்கிறார். பனை மரம் பெரும்பாலும் பலனையும் வெற்றியையும் குறிக்கிறது. மேலும் லெபனானின் கேதுரு, மிகுந்த வலிமை, நிலைத்தன்மை மற்றும் நீண்ட ஆயுளைக் குறிக்கிறது. இப்படியாக முதுமையிலும் நாம் கனி கொடுப்போம் என்று நம் ஆண்டவர் நம்பிக்கை கொண்டுள்ளார். இந்த முதிர்ந்த ஆண்டுகளைப் புதுப்பிக்கப்பட்ட நோக்கத்துடன் ஏற்றுக்கொள்வோம், ஏனென்றால் நமது சேவையின் வளமான நாட்கள் இன்னும் முன்னால் உள்ளன.

### வழிகாட்டுதலின் நம்பிக்கை

முதிர்ச்சியடைந்த கிறிஸ்தவர்கள், வரும் தலைமுறையினருக்கு வழிகாட்டிகள் என்று அழைக்கப்படுகிறார்கள். இந்த உலகத்திற்கு அல்ல மாறாக கடவுளுடன் பணிவுடன் நடக்க, தேவையான ஞானத்தை பகிர்ந்து கொடுப்பார்கள். தோல்வி மற்றும் வெற்றி இரண்டின் மூலம் அவர்கள் சேகரித்த அனுபவங்கள், இளைய விசுவாசிகளுக்கு வலிமையின் ஆழமான ஊற்றாக மாறுகின்றன.

நீதியில் விடாமுயற்சியுடன் வாழ்வதும், சோதிக்கப்பட்ட விசுவாசத்தின் அடித்தளத்தின் படி வாழ்வதும், வழிகாட்டுதலின் மீதான இந்த நம்பிக்கையை மிகவும் திறம்பட செயல்படுத்துகிறது. (கலாத்தியர் 6:7-10, மத்தேயு 7:25-27, மல்கியா 3:3)

கடவுளின் வார்த்தையாலும் தயவாலும் வடிவமைக்கப்பட்ட அவர்களின் வாழ்க்கை அனுபவம், வழிகாட்டுதலுக்கு அவசியமான உண்மையான நம்பிக்கையை உருவாக்குகிறது.

ஒரு மாணவர் வழிகாட்டியின் பாதுகாப்பையும், உண்மையான ஆர்வத்தையும் உணரும்போது, ஆழ்ந்த வளர்ச்சி ஏற்படலாம் - மற்ற எல்லா செல்வாக்கும் இந்த நம்பிக்கையின் அடித்தளத்திலிருந்து உருவாகிறது.

அத்தகைய வழிகாட்டுதல் பாரபட்சம் அல்லது சுயநலம் இல்லாததாக இருக்க வேண்டும். வழிகாட்டியின் குறிக்கோள், அவர்களைப் பின்பற்றுபவர்களை சேகரிப்பதோ அல்லது அவர்களின் சமூக அல்லது அரசியல் ஆதரவைப் பெறுவதோ அல்ல, மாறாக மற்றவர்களை





கிறிஸ்துவையும் அவருடைய வார்த்தையையும் நோக்கி உறுதியுடன் சுட்டிக்காட்டுவதாக இருக்க வேண்டும். "ஒன்றையும் வாதினாலாவது, வீண் பெருமையினாலாவது செய்யாமல், மனத்தாழ்மையினாலே ஒருவரையொருவர் தங்களிலும் மேன்மையானவர்களாக எண்ணக்கடவீர்கள்."(பிலிப்பியர் 2:3)உண்மையில், வழிநடத்தப்படுபவர்களிடையே நம்பிக்கை தடுமாறினால், ஒருவரின் தலைமை முதலில் பரிசோதிக்கப்பட வேண்டியிருக்கும்.

இந்த சக்திவாய்ந்த மாதிரிகளின் தன்னலமற்ற முதலீட்டை வேத வசனங்கள் வழங்குகின்றன, மேலும் நாம் சுதந்திரமாகப் பயன்படுத்தக்கூடிய தனிப்பட்ட கருவிகளின் சக்தியை நிரூபிக்கின்றன. யோசேப்பு, மோசே, சாமுயேல், எலியா, தானியேல், இயேசு, பேதுரு. பவுல் மற்றும் யோவான் ஆகியோரின் வாழ்க்கை நடைமுறை வழிகாட்டுதலுக்கு விலைமதிப்பற்ற மாதிரிகளை வழங்குகிறது. நமது குடும்பங்கள், திருச்சபைகள் மற்றும் சமூகங்களுக்குள் விசுவாசம் மற்றும் ஞானத்தின் மரபை எவ்வாறு விட்டுச் செல்வது என்பதை அவர்களின் வாழ்க்கை நிரூபிக்கிறது.

### யோசேப்பு-ஞானம் மற்றும் நல்லிணக்கம்

எகிப்தில் வளமும் பஞ்சமும் நிலவிய காலங்களில் யோசேப்பின் நிர்வாக மேற்பார்வை, பூமிக்குரிய நன்மைக்காக தெய்வீக ஞானத்தைப் பயன்படுத்துவதற்கான சாத்தியக்கூறுகளைக் காட்டுகிறது.பார்வோனின் கனவுகளை விளக்குவதற்கும், தொலைநோக்குப் பார்வை கொண்ட குடிமைத் திட்டத்தைச் செயல்படுத்துவதற்கும் கடவுள் அவருக்குக் கொடுத்த திறன் பஞ்சத்தைத் தவிர்த்து, தலைமுறைகளைக் காப்பாற்றியது. (ஆதியாகமம் 41)ஆனாலும், யோசேப்பின் ஞானத்தின் மிக சக்திவாய்ந்த வெளிப்பாடு, அவர் தனது சகோதரர்களுடன் சமரசம் செய்து கொள்வதில் தான் காணப்படுகிறது. (ஆதியாகமம்45,50)

கடவுளின், கண்ணுக்குத் தெரியாத கையால் வழிநடத்தப்பட்டு, பல வருட துன்பங்கள், தனிப்பட்ட காயங்களைத் தாண்டிய ஒரு நம்பிக்கையை உருவாக்கியது. தன் சகோதரர்களின் துரோகத்திலும் கூட அவன் கடவுளின் திட்டத்தைக் கண்டான், "நீங்களோ எனக்குத் தீமை செய்ய நினைத்தீர்கள், தேவனோ அதை நன்மையாகவே முடியப்பண்ணினார்" (ஆதியாகமம் 50:20), மேலும் கிருபையை நீட்டி, தன் குடும்பத்தைப் பாதுகாத்து, தன் தந்தைக்குக் கடவுள் கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றினார். மன்னிப்பையும் மீட்பையும் அளிக்கக்கூடிய முதிர்ந்த நம்பிக்கையின் வல்லமையான மற்றும் ஆழமான பாடம் இது. யோசேப்பின் விசுவாச சாட்சியத்தைப் பற்றிய ஒரு தனித்துவமான நுண்ணறிவை அப்போஸ்தலன் பவுல் பகிர்ந்து கொண்டார். (எபிரெயர் 11:22) "விசுவாசத்தினாலே யோசேப்பு இஸ்ரயேல் புத்திரர் எகிப்து தேசத்தைவிட்டுப் புறப்படுவார்களென் பதைப்பற்றித் தன் அந்திய காலத்தில் பேசி, தன் எலும்புகளைக்குறித்துக் கட்டளைகொடுத்தான்."யோசேப்பு.தனது குடும்பத்திற்கு ஒரு தாயகம் என்ற கடவுளின் வாக்குறுதியில் நம்பிக்கை காண்பித்தபடியால், அவர் தனது எலும்புகளை அங்கு அடக்கம் செய்வதற்கு கட்டளையிட்டார். கடவுளுடைய இராஜ்யமே உண்மையான இடமாக இருக்கும் என்ற வாக்குறுதியில் மிகுந்த நம்பிக்கையைப் பேணுவதற்கு யோசேப்பு நமக்குக் கற்றுக் கொடுத்தார்.

கடவுளின் வாக்குறுதிகள் மீதான அவரது நம்பிக்கை, அவருக்குக் கீழ்ப்படிந்த வாழ்க்கையை வாழ்வதற்கான வெகுமதியாகும்.

### மோசே-தலைமைத்துவத்தின் போர்வை

மோசே பல தசாப்தங்களாக இஸ்ரவேலை வழிநடத்தினார், மேலும் அவரது பிற்காலங்கள் அவரது வாரிசான யோசுவாவின் வழிகாட்டுதலால் குறிக்கப்பட்டது. (உபாகமம்31:1-8, 23)

அடுத்த தலைமுறையைத் தயாரிப்பது வாழ்க்கையின் குளிர்க்காலத்தின் ஒரு அருமையான பாக்கியம். கடவுளின் திட்டத்தில் நம்பிக்கையுடன், மோசே தனது தலைமைப் பதவியில் உறுதியாக இருக்கவில்லை, மாறாக மற்றொருவரைத் தயார்படுத்துவதில் தன்னை அர்ப்பணித்தார். உபாகமம் புத்தகம், வாக்குப்பண்ணப்பட்ட தேசத்திற்குள் நுழையத் தயாராகும் போது, இஸ்ரயேலர்களுக்கு மோசே வழங்கிய விசுவாசத்தைப் பலப்படுத்தும் பிரியாவிடை உரைகளின் தொடராகும். இஸ்ரயேல் மீது அவர் கொண்டிருந்த ஆழ்ந்த அன்பையும் அவருடைய ஞானமும் அவர்களுக்கு சாட்சியமளித்தனது. அவர் கடவுளின் உண்மைத்தன்மையை நினைவுகூர்ந்தார், உடன்படிக்கை நிபந்தனைகளை மீண்டும் வலியுறுத்தினார், இஸ்ரயேல் மக்களுக்கு தீர்க்கதரிசன ஆசீர்வாதங்களையும் எச்சரிக்கைகளையும் அறிவித்தார். இஸ்ரயேலரின்



விசுவாச மரபை மோசே நினைப்பூட்டுகிறார், எதிர்கால சந்ததியினருக்கு விசுவாசத்தை ஊக்குவிப்பதில் அனுபவம் வாய்ந்த சகோதரர்களின் பங்கை எடுத்துக்காட்டுகிறார்.

மோசே வரம்புகளை எதிர்கொள்ளும்ப போதும் அவருடைய மனத்தாழ்மை அதிகமாக பிரகாசிக்கிறது. (உபாகமம் 3:23-28) அவர் இறுதிவரை தனது அழைப்புக்கு உண்மையாகவே இருந்தார். வாழ்க்கையின் குளிர்காலத்தில் உண்மைத்தன்மை, வெளிப்பாட்டில் வேறுபட்டிருந்தாலும், கடவுளின் பார்வையில் குறைவான முக்கியத்துவம் வாய்ந்ததல்ல என்பதை அவரது உதாரணம் நமக்குக் கற்பிக்கிறது.

### மேய்ப்பனாகவும் தீர்க்கதரிசியாகவும்

தாவீன் அபிஷேகம் கடவுளின் இறையாண்மையையும், மனித பகுத்தறிவை விட கீழ்ப்படிதலின் அவசியத்தையும் எடுத்துக்காட்டுகிறது. (1சாமுயேல் 16:1-13) அனுபவம் வாய்ந்த தீர்க்கதரிசி சாமுயேல் ஆரம்பத்தில் ஈசாயின் மகன்களை வெளிப்புற தோற்றத்தை வைத்து மதிப்பிட்டார். ஆனால் கடவுள் அவரைத் திருத்தினார். "...மனுஷன் பார்க்கிறபடி நான் பாரேன் முகத்தைப் பார்ப்பான், கர்த்தரோ இருதயத்தைப் பார்க்கிறார் என்றார்."(1சாமுயேல் 16:7)

கடவுளின் தேர்வு, இளைய மேய்ப்பரான தாவீதின் மீது விழுந்தது -இவர் மனித தராதரங்களால் மிகக் குறைவாக எதிர்பார்க்கப்பட்ட மேய்ப்பன். "எழுந்து அவனை அபிஷேகம் செய் - இவன்தான்" (1சாமுயேல் 16:12) என்று தேவன் அறிவித்தபோது, சாமுயேல் உடனடியாக தேவனுக்குக் கீழ்ப்படிந்து, தன் நியாயத்தீர்ப்பை ஒதுக்கி வைத்தார். இது நமது முன்கூட்டிய கருத்துக்களை மீறினாலும் கூட, கடவுளின் விருப்பத்துடன் ஒத்துப்போவதன் முக்கியத்துவத்தை நிரூபிக்கிறது.

கடவுள் எல்லாவற்றிற்கும் மேலாக ஒரு அர்ப்பணிப்புள்ள இருதயத்தை மதிக்கிறார், மேலும் சாமுயேல் தீர்க்கதரிசியைப் போலவே, அவருடைய ஊழியர்களும் அவருடைய அழைப்பிற்கு தயாராக விசுவாசத்துடன் பதிலளிக்க வேண்டும்.

### சுடர் தொடர்ந்து பரவியது - எலியாவும் எலிசாவும்

தீர்க்கதரிசி எலியாவிலிருந்து அவரது வாரிசான தீர்க்கதரிசி எலிசாவாக மாறியது,

கடவுளின் சேவையில் சிறந்த வழிகாட்டுதலைக் காட்டுகிறது. (1இராஜாக்கள் 19:16-21, 2இராஜாக்கள் 2:1-15)விசுவாசத்தில் வைராக்கியமும் வல்லமையும் கொண்ட எலியாவை, தனது வாரிசாக அபிஷேகம் செய்யும்படி கடவுளால் அறிவுறுத்தப்பட்டார். அவர் எலிசா மீது தனது சால்வையை வீசி, அவரை அழைப்பதற்கான உறுதியான செயலாக காண்பித்தார்.

எலிசாவின் உடனடி பதில் - அவரை பின்பற்ற எல்லாவற்றையும் விட்டுவிட்ட காரியம் - அவரது தயார் நிலையைக் காட்டியது. கீழ்ப்படிதலில் உருவான அவர்களின் உறவு, பகிரப்பட்ட சோதனைகளையும் அற்புதங்களையும் உள்ளடக்கியது. எலியா தனது புறப்பாடு நெருங்கிவிட்டதை அறிந்திருந்தும், எலிசாவின் உறுதிப்பாட்டை சோதித்துப் பார்த்து அவரை தயார்படுத்தினார். எலியாவின் ஆவியின் "இரட்டிப்பான பங்கை" எலிசா மனதார மன்றாடியது, அவர்களுடைய பிணைப்பின் ஆழத்தையும், இந்த ஆவிக்குரிய சுதந்தரத்தின் மீது அவர்கள் ஒவ்வொருவரும் வைத்திருந்த மிகுந்த மதிப்பையும் வெளிப்படுத்தியது. (2இராஜாக்கள் 2:9)

எலியாவின் செயல்கள், தெய்வீக வழிகாட்டிகள் தங்கள் வாரிசுகளில் முழு மனதுடன் முதலீடு செய்து, கடவுளின் பணியின் தொடர்ச்சியை உறுதி செய்கின்றன என்பதை நமக்குக் கற்பிக்கின்றன.



எலியா "தீர்க்கதரிசிகளின் பள்ளியை" (2இராஜாக்கள் 2:3-7, 4:38) வளர்த்தார், இது கடவுளின் வழிகளையும் அவருடைய ஊழியத்தையும் கற்றுக்கொள்வதற்கு அர்ப்பணிக்கப்பட்ட சமூகங்களாகும். அவர் அறிவைப் புகட்டினார், கடவுளின் குரலைப் புரிந்துகொள்ள உதவினார், இந்த இளையவர்களுக்கு ஆதரவளித்தார். எலியாவின் உதாரணம் வழிகாட்டுதலின் ஒரு பரந்த அம்சத்தை நிரூபிக்கிறது :- இது அடுத்த தலைமுறைசெழிக்கக்கூடிய ஆவிக்குரிய பரிசுகளையும், கடவுள் வளர்த்து வெளிப்படுத்தக்கூடிய விசுவாசிகளின் இருதயங்களில் நல்ல நிலத்தையும் வளர்க்கிறது.

## தானியேலின் நேர்மை - நாடு கடத்தப்படுதல்

தானியேலின் நீண்ட ஆயுள், அவரது முதுமையிலும் கூட அசைக்க முடியாத விசுவாசத்தையும் செல்வாக்கையும் கொண்டிருப்பதை எடுத்துக்காட்டுகிறது - இது அவர் கடவுளிடம் ஒழுக்கமான பக்தியில் வேரூன்றியிருந்ததற்கு ஒரு சான்றாகும். பாபிலோன் மற்றும் பெர்சியாவின் துரோக அரசியல் தடைகளைத் தாண்டி, அவர் பாவம் செய்ய முடியாத ஒருமைப்பாட்டையும் நீதிக்கான அர்ப்பணிப்பையும் பராமரித்தார். "... தன் இருதயத்தில் தீர்மானம்பண்ணிக்கொண்டு, தன்னைத் தீட்டுப்படுத்தாதபடி ...."(தானியேல் 1:8)வயதான காலத்தில் செழித்தோங்கிய தானியேல், முதிர்ச்சியடைந்த விசுவாசிகள் உலகப்பிரகாரமான வேலையில் விளக்குகளாக பிரகாசிக்க முடியும் என்பதையும், ஒரு இளைஞனாக இருந்தபோதும், மிகுந்த உலகப்பிரகாரமான அழுத்தத்தின் மத்தியிலும் தெய்வீகக் கொள்கைகளைப் பற்றிக் கொள்ள முடியும் என்பதையும் நிரூபித்தார்.

தானியேல் கடவுளின் தீர்க்கதரிசன செய்திகளுக்கான ஒரு வழியாக இருந்தார், தரிசனங்களை விளக்கினார் மற்றும் அவரது வாழ்க்கையின் குளிர்காலத்தில் பூமிக்குரிய ஆட்சியாளர்களுக்கு பரலோக ஞானத்தை வழங்கினார். (தானியேல் 5:7-12)இராஜா அவருடைய ஆலோசனையை நாடினார், அவருடைய நுண்ணறிவுகள் முக்கியமான வழிகாட்டுதலை வழங்கின. தானியேலின் நீடித்த அனுபவம்,

ஆவிக்குரிய வரங்களையும் பகுத்தறிவையும் வளர்ப்பதன் மதிப்பை அடிக்கோடிட்டுக் காட்டுகிறது, அவை நம் வாழ்க்கையின் குளிர்காலத்தில் மங்காமல் செழிக்க வேண்டும்.

நிச்சயமற்ற அரசியல் மற்றும் பொருளாதார எதிர்காலத்தை எதிர்கொள்ளும்போது கடவுளின் பாதுகாப்பில் நம்பிக்கையுடன் இருக்க தானியேல் நமக்குக் கற்பிக்கிறார். இராஜாவாகிய பெல்ஷாத்சாருக்கு ஆலோசகராக, சுவரில் எழுதப்பட்டிருந்த கையெழுத்தின் தரிசனத்தை விளக்கிக் கொண்டிருந்தபோது, இராஜாவாகிய பெல்ஷாத்சார் தானியேலுக்கு பாபிலோனில் மூன்றாவது ஆட்சியாளரின் பதவியை வழங்கினார். "அப்பொழுது தானியேல் இராஜசமுகத்தில் பிரதியுத்தரமாக, உம்முடைய வெகுமானங்கள் உம்மிடத்திலேயே இருக்கட்டும், உம்முடைய பரிசுகளை வேறொருவனுக்குக் கொடும், இந்த எழுத்தை நாம் இராஜாவுக்கு வாசித்து, இதின் அர்த்தத்தை தெரிவிப்பேன்."(தானியேல் 5:17) எந்தவொரு



சாத்தியமான வெகுமதியைப் பொருட்படுத்தாமல் நிச்சயமற்ற எதிர்காலத்தை எதிர்கொள்ளும் போதிலும், கடவுளுடைய வார்த்தையின் உண்மையைப் பேச தானியேலின் பதில் நமக்குக் கற்பிக்கிறது.

சிங்கத்தின் கெபியில் போடப்பட்டபோதும் (தானியேல் 6), ஜெபத்தின் மீது தானியேலின் உறுதியான நம்பிக்கை அவரைத் தாங்கி, அவருடைய சாட்சியை தூய்மையாக வைத்திருந்தது.

கடவுளுடனான இந்த ஐக்கியம் அனைத்து விசுவாசிகளுக்கும் இன்றியமையாதது, பெரும்பாலும் வயதாகும் போதுசரீரத்தின் பலங்கள் குறையும் போது விசுவாசத்தின் ஆழமான நங்கூரமாக மாறுகிறது.

தானியேல் நமக்குக் கணக்குக் கொடுக்கும் ஒழுக்கத்தையும் கற்றுக்கொடுக்கிறார். "உம்முடைய கற்பனைகளையும் உம்முடைய நியாயங்களையும் " (தானியேல் 9:5)கடவுளின் பெருநிறுவனப் பொருளாதாரத்தில், அப்பாவித் தலைவர்கள் தங்களைப் பிரச்சினையின் ஒரு பகுதியாகச் சேர்க்கும் போது, அவர்களுக்குத் தீர்வைக் கண்டறியும் ஆசீர்வாதம் வழங்கப்படுகிறது. தானியேலின் விஷயத்தில், இஸ்ரயேலின் விடுதலையைப் பற்றிய நம்பிக்கை நிறைந்த தீர்க்கதரிசனங்களையும், உலக இரட்சிப்பின் நேரத்தைப் பற்றிய தீர்க்கதரிசனங்களையும் கடவுள் அவருக்குக் கொடுத்தார். (தானியேல் 9,12)

## நம்பிக்கையில் ஒரு பாடம்

கலிலேயா கடலில் (மாற்கு 4:35-41), இறுதி வழிகாட்டியான இயேசு, விசுவாசத்தில் ஒரு வியத்தகு பாடத்தை வழங்கினார். இயேசு தூங்கிக் கொண்டிருந்தபோது, ஒரு கடுமையான புயல் சீடர்களைப் பயமுறுத்தியது, அனுபவம் வாய்ந்த மீனவர்களாக இருந்தபோதிலும் அவர்களின் அடிப்படை நம்பிக்கையின்மையை வெளிப்படுத்தியது."ஐயோ, நாங்கள் மடிந்து போவதை நீர் கவனிக்கவில்லையா? (மாற்கு 4:38) என்ற அவர்களின் பயமுறுத்தும் கூக்குரல், அவர்களின் தளர்வான நம்பிக்கையை வெளிப்படுத்தியது. இயேசு விழித்தெழுந்து காற்றையும் அலைகளையும் நோக்கி, "அமைதி அமைதியாக இரு"(மாற்கு 4:39)என்று கட்டளையிட்டார். இதன் விளைவாக உடனடி அமைதி ஏற்பட்டது, மேலும் அவரது சீஷர்கள் மத்தியில் அவரை மேசியாவாக அங்கீகரித்தனர். "ஏன் இப்படிப் பயப்பட்டீர்கள் ? ஏன் உங்களுக்கு விசுவாசம் இல்லாமற்போயிற்று என்று"(மாற்கு4:40) நேரடியாக அவர்களுக்கு சவால் விடுத்தார். இந்த "ஜீவனுள்ள உவமை" அவர்களுக்கு கடவுள் மீது முழுமையான நம்பிக்கையைக் கற்றுக் கொடுத்தது. இது கடவுளின் படைப்பின் மீது இயேசுவின் அதிகாரத்தையும் வெளிப்படுத்தியது (சங்கீதம்



89:9ஐ நிறைவேற்றுகிறது) மேலும் பகிரப்பட்ட அனுபவத்தின் மூலம் சீஷர்கள் மீது வலுவான நம்பிக்கையை உருவாக்கியது. ஆழமான ஆவிக்குரிய உண்மைகளைப் புகுத்த இயேசு நிஜ வாழ்க்கை நெருக்கடிகளைத் திறமையாகப் பயன்படுத்தினார்.

## பேதுரு :- மூர்க்கத்தனத்திலிருந்து உறுதியான தன்மைக்கு மாறுதல்

பேதுருவின் பிற்கால எழுத்துக்கள், சோதனையாலும் கிருபையாலும் முதிர்ச்சியடைந்த ஒரு அப்போஸ்தலரை வெளிப்படுத்துகின்றது, சகோதரர்களின் ஆவிக்குரிய உறுதிப்பாட்டில் ஆழ்ந்த அக்கறை கொண்டவராக காணப்பட்டார். வழிதவறிச் செல்லும் மாம்சப் போக்கை அவர் அடையாளம் காண்கிறார், மேலும் அடிப்படை உண்மைகளை "நினைவில்" வைத்திருப்பதன் அவசியத்தை அடிக்கோடிட்டுக் காட்டுகிறது. (2பேதுரு1:12-15)விசுவாசத்தின் மாறாக நங்கூரத்தை இளைய விசுவாசிகளுக்கு நினைப்பூட்ட அவரது உதாரணம் நமக்குக் கற்பிக்கிறது.

பேதுரு விசுவாசிகளை "நம்முடைய கர்த்தரும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் கிருபையிலும் அவரை அறிகிற அறிவிலும் வளருங்கள் (2பேதுரு 3:18)என்று வலியுறுத்துகிறார், இது வாழ்நாள் முழுவதும் பரிசுத்தமாக்குதலின் தன்மையையும், இளையவர்களை குறுகிய பாதையில் வழிநடத்துவதில் முதிர்ச்சியடைந்த சகோதரர்கள் வகிக்கும் முக்கிய பங்கையும் வலியுறுத்துகிறது. பொய்யான போதகர்களுக்கு எதிரான அவரது கூர்மையான எச்சரிக்கைகள் (2பேதுரு2) பல ஆண்டுகளாக விசுவாசத்திற்காகப் போராடுவதன் மூலம் மெருகூட்டப்பட்ட ஒரு அனுபவமிக்க பகுத்தறிவை நிரூபிக்கின்றன. (2பேதுரு3:18)தனது ஆண்டவரை மறுதலித்த பேதுருவை சுவிசேஷங்களின் தீவிரமான பேதுருவோடு வேறுபடுத்திப் பாருங்கள். (மத்தேயு 26:69- 75) அனுபவம் வாய்ந்த அப்போஸ்தலன் பேதுருவுடன், அதிகாரத்துடனும், ஒரு மேய்ப்பனின் மென்மையான இருதயத்துடனும் எழுதுவது போதனையானது. வாழ்க்கையின் சோதனைகள் மற்றும் வெற்றிகள் மூலம் பெறப்பட்ட ஒரு விலைமதிப்பற்ற கண்ணோட்டமான கடவுளின் மறுசீரமைப்பு கருணைக்கு அவரது விசுவாசப் பயணம் சக்திவாய்ந்த சாட்சியமளிக்கிறது.

## பவுல்-தெய்வபக்திக்கு வழிகாட்டி

தீமோத்தேயு மற்றும் தீத்துவுக்கு அப்போஸ்தலன் பவுல் எழுதிய கடிதங்கள் ஒரு வழிகாட்டியின் இருதயத்தைக் காட்டுகின்றன. 1மற்றும் 2தீமோத்தேயுவில், வெறும் போதனையை மட்டுமல்ல, தீமோத்தேயுவின் ஆவிக்குரிய வளர்ச்சி மற்றும் திருச்சபையில் தலைமைத்துவத்திற்கான முதலீடாகவும் இருப்பதை நாம் காண்கிறோம். தவறான கோட்பாடுகளை எதிர்கொள்வதிலிருந்து தெய்வீக ஒழுங்கை நிறுவுவது வரை, திருச்சபைத் தலைமையின் சிக்கல்களைக் கடந்து செல்வதற்கான வழிகாட்டுதலை அவர் வழங்குகிறார். "வேற்றுமையான உபதேசங்களைப் போதியாதபடிக்கும்.." (1தீமோத்தேயு1:3) பவுலின் வழிகாட்டுதல் ஊக்கமளிப்பதாகவும்

சவாலானதாகவும் இருந்தது. அவர் தீமோத்தேயுவுக்கு இவ்வாறு அறிவுறுத்தினார். "விசுவாசத்தின் நல்ல போராட்டத்தைப் போராடு, நித்திய ஜீவனைப் பற்றிக்கொள்.."(1தீமோத்தேயு6:12) மேலும், "சமயம் வாய்த்தாலும் வாய்க்காவிட்டாலும் ஜாக்கிரதையாய்த் திருவசனத்தைப் பிரசங்கம்பண்ணு, எல்லா நீடிய சாந்தத்தோடும் உபதேசத்தோடும் கண்டனம்பண்ணி கடிந்துகொண்டு, புத்திசொல்லி.." (2தீமோத்தேயு4:2)வழிகாட்டுதலுக்கு உத்வேகம் மற்றும் திருத்தம் - இரண்டும் தேவை என்பதை பவுலின் உதாரணம் நமக்குக் காட்டுகிறது.

சிறையில் அடைக்கப்பட்டு பலியின் மரணத்தை எதிர்கொண்டபோதும், பவுலின் வாழ்க்கையின் உதாரணம் அவருக்கு மிகவும் சக்திவாய்ந்த பாடமாக இருந்தது. அவர் சுவிசேஷத்தை அசைக்க முடியாத வகையில் அறிவித்ததும், கிறிஸ்துவுக்காகத் துன்பங்களைத் தாமாகவே சகித்துக்கொண்டதும், விசுவாசத்தின் நீடித்த மாதிரியை உருவாக்கியது. "அதினிமித்தம் நான் இந்தப் பாடுகளையும் அனுபவிக்கிறேன். ஆயினும் நான் வெட்கப்படுகிறதில்லை, ஏனென்றால், நான் விசுவாசித்திருக்கிறவர் இன்னார் என்று அறிவேன், நான் அவரிடத்தில் ஒப்புக்கொடுத்ததை அவர் அந்நாள் வரைக்கும் காத்துக்கொள்ள வல்லவராயிருக்கிறாரென்று நிச்சயித்துமிருக்கிறேன்."(2தீமோத்தேயு1:12)தீமோத்தேயுவும், அதைத் தொடர்ந்து வந்த சீஷர்களின் தலைமுறையினரும், மரணத்தை எதிர்கொண்டபோதும் கூட, பவுலின் தத்துவார்த்த நம்பிக்கையிலிருந்து கற்றுக்கொள்வார்கள்."

ஏனென்றால், நான் இப்பொழுதே பானபலியாக வார்க்கப்பட்டுப்போகிறேன், நான் தேகத்தை விட்டுப் பிரியும் காலம் வந்தது, நல்ல போராட்டத்தைப் போராடினேன், ஓட்டத்தை முடித்தேன், விசுவாசத்தைக் காத்துக்கொண்டேன்." (2தீமோத்தேயு4:6-7)

### யோவான்-- அன்பும் சத்தியமும்

அன்பான சீஷனான யோவான் (1,2 மற்றும் 3 யோவான்) தனது பிந்தைய நிருபங்களில், அன்பு, உண்மை மற்றும் பகுத்தறிவு கருப்பொருள்களால் பின்னிப் பிணைந்த சிறந்த கிறிஸ்தவ வாழ்க்கையை வலியுறுத்துகிறார். விசுவாசமுள்ள ஒரு மனுஷன், அவர் வளர்ந்து வரும் மதங்களுக்கு எதிரான கொள்கைகளை எதிர்கொண்டு விசுவாசிகளை ஆரோக்கியமான கோட்பாட்டில் நங்கூரமிட்டார் என்று ஒரு மூப்பராக இருக்கும் அவர் கூறினார். "பிரியமானவர்களே, உலகத்தில் அநேகங் கள்ளத்தீர்க்கதரிசிகள் தோன்றியிருப்பதினால், நீங்கள் எல்லா ஆவிகளையும் நம்பாமல், அந்த ஆவிகள் தேவனால் உண்டானவைகளோ என்று சோதித்தறியுங்கள்"(1யோவான்4:1)

கோட்பாட்டு நேர்மையை ஆதரவாளர்களாக முதிர்ச்சியடைந்த விசுவாசிகளின் முக்கிய பங்கை யோவான் எடுத்துக்காட்டுகிறார். பத்மு தீவில் அவர் வெளிப்படுத்தியதைப் பதிவு செய்திருப்பது, அநேகமாக அவரது வயதான காலத்தில், கிறிஸ்துவின் வெற்றியின் இறுதி தீர்க்கதரிசனக் காட்சியை வழங்கியிருக்கிறது. (வெளிப்படுத்துதல் 1:1-2, 9)

யோவானின் வாழ்நாள் சாட்சியம் அதாவது கலிலேயா கடலோரமாக இயேசுவோடு நடப்பது முதல் தரிசனங்களில் அவருடைய மகிமையைக் காண்பது வரை, கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை அறிவிப்பதில் ஒரு அசைக்க முடியாத, நீடித்த அர்ப்பணிப்பை நிரூபிக்கிறது.

யோவானின் எழுத்துக்கள் தொடர்ந்து விசுவாசிகளை அடிப்படைக் கொள்கைகளுக்குத் திரும்ப அழைக்கின்றன:அன்பில் நடந்து கடவுளின் கட்டளைகளைக் கைக்கொள்ளுங்கள், "நாம் அவருடைய கற்பனைகளின்படி நடப்பதே அன்பு, நீங்கள் ஆதிமுதல் கேட்டிருக்கிறபடி நடந்துகொள்ளவேண்டிய கற்பனை இதுவே."(2யோவான் 1:6)அவரது முதிர்ந்த கண்ணோட்டம் நம்பிக்கை மற்றும் நடைமுறையின் சமநிலையான ஒருங்கிணைப்பை வழங்குகிறது. இது ஒரு வெளிப்படையான, வாழும் கிறிஸ்தவத்தை நமக்கு ஊக்குவிக்கிறது.

### இன்றைய விண்ணப்பம்

இந்த விவிலிய விசுவாச நாயகர்களின்

வாழ்க்கை, 21 ஆம் நூற்றாண்டில் பயணிக்க முயற்சிக்கும் அனைத்து விசுவாசிகளுக்கும் பொருத்தமான கொள்கைகளின் தொகுப்பை வழங்குகிறது. தீமோத்தேயு மற்றும் தீத்துவின் மீது பவுல் ஆழமாக முதலீடு செய்தது போல, இன்றைய முதிர்ச்சியடைந்த கிறிஸ்தவர்கள் இளைய தலைமுறையினரின் வாழ்க்கையில் ஆவிக்குரிய பலத்தை ஊற்றவும், அவர்களின் தனித்துவமான அழுத்தங்களைப் புரிந்துகொண்டு, பச்சாதாபம், பொறுமை, வேத வழிகாட்டுதலை வழங்கவும் அழைக்கப்படுகிறார்கள்.

அனுபவம் வாய்ந்த சகோதரர்கள் வைத்திருக்கும் செல்வம், பொருள் சார்ந்தது அல்ல, மாறாக அனுபவபூர்வமானது மற்றும் ஆன்மீகமானது. அவர்கள் இளைய சகோதரர்களுக்கு கீழ் காணும் விலைமதிப்பற்ற ஆலோசனைகளை வழங்க முடியும் :

● விசுவாசமும் பகுத்துணர்வும். வேத அடித்தளத்தை உருவாக்குவதற்கு,வேதத்தைப் பற்றிய ஆழமான புரிதல், குழப்பமான உலகில் பிழையிலிருந்து சத்தியத்தைப் பகுத்தறிதல்.

● உறவுகள். திருமணம், குடும்ப இயக்கவியல் மற்றும் மோதல், தீர்வு ஆகியவற்றை தெய்வீக ஞானத்துடன் வழிநடத்துதல்.

● அழைப்பு மற்றும் தொழில். ஆவிக்குரிய வரங்களைக் கண்டறிதல், கடவுளின் நோக்கத்தைப் பின்பற்றுதல் மற்றும் அன்றாட வேலைகளில் விசுவாசத்தை ஒருங்கிணைத்தல்.

● விடாமுயற்சி. சோதனைகளின் மூலம் ஊக்கத்தை வழங்குதல், கடவுளின் நிலை நிறுத்தும் கிருபையின் தனிப்பட்ட சாட்சியங்களைப் பகிர்ந்து கொள்ளுதல் மற்றும் கடவுளின் வாக்குறுதிகளை அடிப்படையாகக் கொண்ட நம்பிக்கையை வழங்குதல். இந்த முதலீடு ஒருவரின் ஆவிக்குரிய பரிசுகளைப் பொறுத்து பல வடிவங்களை எடுக்கலாம்.

● வழிகாட்டுதல். தனிப்பயனாக்கப்பட்ட வழிகாட்டுதலை வழங்கும் முறையான அல்லது முறைசாரா உறவுகள்.

● கற்பித்தல். சபைகளிலும், வேத படிப்புகள் மற்றும் வீட்டிலும் அறிவைப் பகிர்ந்து கொள்ளுதல்.

● சீஷராக்குதல். மற்றவர்களுடன் சேர்ந்து நடப்பது, பொறுப்புணர்வு மற்றும் ஆவிக்குரிய வளர்ப்பை வழங்குதல்.

● கதைளைப் பகிர்ந்துகொள்வது. அவர்களுடைய வாழ்க்கையில் கடவுளின் உண்மைத்தன்மைக்கு சாட்சியமளித்து, வேதாகமக் கொள்கைகளை உறுதியாக்குகிறது.

இந்த வழிகாட்டுதல் "பாரபட்சமின்றி, பாசாங்கு இல்லாமல்" வழங்கப்பட வேண்டும். (யாக்கோபு3:17)

● பணிவு. அவர்களும் கற்பவர்கள் என்பதை அங்கீகரித்து, இன்னும் கிருபையில் வளர்கிறது.

● ஊக்கமளித்தல். கட்டியெழுப்புதல், திறனில் கவனம் செலுத்துதல், அன்பில் சத்தியத்தைப் பேசுதல்.

● கடவுளுடைய வார்த்தையின் மேல் சார்ந்திருத்தல். வேதத்தின் மாறாத சத்தியங்களில் அனைத்து ஆலோசனைகளையும் நிலைநிறுத்துதல்.

"முதுமையில் கனிகளைத் தரும்" இந்த வழிகாட்டுதல் இரண்டையும் வளப்படுத்துகிறது. இளைய விசுவாசிகள் ஞானத்தைப் பெறுகிறார்கள், அதே நேரத்தில் முதிர்ந்த கிறிஸ்தவர்கள் புதுப்பிக்கப்பட்ட நோக்கத்தையும் தெய்வீக பரம்பரையை பின் வைத்து செல்வதன் மகிழ்ச்சியையும் காண்கிறார்கள்.

பூமிக்குரிய உடைமைகள் ஆவிக்குரிய செல்வத்தை அளவிடுவதில்லை, மாறாக இந்த உலகத்தை குறைவாகவும், அவரை அதிகமாகவும் தேவைப்படும் சுதந்திரத்தால் அளவிடப்படுகிறது. இது கடவுளுடனான தொடர்பு என்ற ரகசிய இடத்தில் வளர்க்கப்பட்ட கற்றறிந்த அனுபவங்களின் செழுமையாகும். (சங்கீதம் 1:1-3)

வரலாற்று ரீதியாக, தலைமுறைகள் வழிகாட்டுதலுக்காக தங்கள் பெரியவர்களை

நோக்கிச் சென்றன. இருப்பினும், இன்று, பல இளைஞர்கள் சமூக ஊடகங்களின் செல்வாக்கின் மூலம் பரப்பப்படும் நிலையற்ற மற்றும் தெய்வீகமற்ற மதிப்புகளால் வழிநடத்தப்படுகிறார்கள், அந்நியர்கள் பரிசுத்தமற்ற உள்ளடக்கம் மற்றும் அடிமையாக்கும் வழிமுறைகள் மூலம் மெய்நிகராக அவர்களுக்கு வழிகாட்ட அனுமதிக்கிறார்கள்.கடவுளின் வடிவத்திலிருந்து இந்த விலகல் பெரும்பாலும் தனிநபர்களை மெதுவான ஆவிக்குரிய முடமாக்கும் பாதைகளுக்கு இட்டுச் செல்கிறது, இது கிறிஸ்துவில் வாக்குறுதியளிக்கப்பட்ட ஏராளமான வாழ்க்கையிலிருந்து வெகு தொலைவில் உள்ளது. (யோவான் 10:10)

## பெற்றோரின் தோல்வி

குறிப்பாக குடும்பத்திற்குள் ஆவிக்குரிய வழிகாட்டுதல் தோல்வியடையும் என்றும் வேதாகமம் எச்சரிக்கின்றது. (1சாமுயேல் 8:3) "ஆனாலும் அவனுடைய குமாரர் அவன் வழிகளில் நடவாமல், பொருளாசைக்குச் சாய்ந்து, பரிதானம் வாங்கி, நியாத்தைப் புரட்டினார்கள். "அவர்களின் ஊழல், இஸ்ரயேலர்கள் ஒரு மனித இராஜாவைக் கோர வழிவகுத்தது, அவர்களின் தேசிய விதியை மாற்றியது - சாமுயேல் தனது குழந்தைகளுக்கு நேர்மையைக் கற்பிக்கத் தவறியதன் விளைவாக இது வேரூன்றியது. அதேபோல், பிரதான ஆசாரியனாகிய ஏலி, "கர்த்தரை அறியாத" தனது பொல்லாத குமாரர்களான ஓப்னி மற்றும் பினெகாசைக் கட்டுப்படுத்தத் தவறிவிட்டார். (1சாமுயேல் 2:12)தீர்க்கமான திருத்தத்திற்குப் பதிலாக, ஏலியின் பலவீனமான கடிந்துகொள்ளுதல்கள், அவருடைய வீட்டின் மீது தெய்வீக நியாயத்தீர்ப்பைக் கொண்டு வந்தது. (1சாமுயேல் 2:27-36, 4:11-18)இந்த விவரிப்புகள், அடுத்த தலைமுறையினரிடம் நம்பிக்கையை விடாமுயற்சியுடன் வளர்ப்பது பெற்றோரின் பரிசுத்தமான கடமையை அடிக்கோடிட்டுக் காட்டுகின்றன.இந்தப் பகுதியில் புறக்கணிக்கப்படுவது ஒரு பயனுள்ள பரம்பரையை ஆபத்தில் ஆழ்த்துகிறது மற்றும் தலைமுறை தலைமுறையாக அலைமோதும் ஆவிக்குரிய சிதைவை அழைக்கிறது.

மாறாக, முந்தைய ஆண்டுகளில் சிறப்பாக வாழ்ந்த வாழ்க்கை கடவுளின் பரிசுத்தப்படுத்தும் கைக்கு அடிபணிவதன் மூலம் குறிக்கப்பட்டது, இந்த வாழ்க்கையின் குளிர்காலத்தில் நீதி, அன்பு, கருணை மற்றும் பாரபட்சமற்ற தன்மை ஆகியவற்றின் பலனைத் தருகிறது. (நீதிமொழிகள் 3:13-26)சுத்திகரிப்பாளரின் அக்கினியில் வளர்க்கப்பட்ட அத்தகைய கடவுளின் பிள்ளைகள், பாதுகாப்பின்மை, அரசியலின் சிக்கல்கள் அல்லது திருச்சபைக்கு அல்லது அவர்களது குடும்பங்களுக்குள் தற்காப்பு நிலைப்பாட்டிருந்து விடுபட்டு, விசுவாசத்தில் நம்பிக்கையுடன் நிற்கிறார்கள். மாறாக, சுய விருப்பத்தாலும், ஒருவேளை உறுதிப்பாட்டுக்கான விருப்பத்தாலும் வழிநடத்தப்படும் வாழ்க்கை தவிர்க்க முடியாமல் கடவுளின் திருத்தத்தை வரவேற்கிறது. இந்த மாம்சத்தால் ஈர்க்கப்பட்ட பயணம், குடும்பங்கள் மற்றும் திருச்சபைகளின் முறிவு போன்ற இணை சேதங்களுக்கு வழிவகுக்கிறது.

## நடத்தையின் (ஒழுக்கம்) தாக்கம்

"தேவவசனத்தை உங்களுக்குப் போதித்து உங்களை நடத்தினவர்களை நீங்கள் நினைத்து, அவர்களுடைய நடக்கையின் முடிவை நன்றாய்ச் சிந்தித்து, அவர்களுடைய விசுவாசத்தைப் பின்பற்றுங்கள்."(எபிரெயர் 13:7 ) பவுலின் அறிவுரை உண்மையுள்ள மூப்பர்களின் செல்வாக்கின் செயலில் உள்ள மூலப்பொருளை எடுத்துக்காட்டுகிறது. நமது மூப்பர்களின் "உரையாடலை" அதாவது அவர்களின் முழு வாழ்க்கை முறை, நடத்தை, அவர்களின் விசுவாசத்தின் ஒரு முக்கிய குறிகாட்டியாகக் கருத்தில் கொள்ளுமாறு பவுல் நமக்கு அறிவுறுத்துகிறார். வாழ்க்கையின் குளிர்கால சூழலில், கடவுளுடன் உண்மையாக நடந்தவர்களின் ஞானத்திலிருந்தும் முன்மாதிரியிலிருந்தும் கற்றுக்கொள்ள இது நம்மை வழிநடத்துகிறது. சிறப்பாக ஆட்சி செய்த தலைமைக்கு சந்தேகத்தின் பலனை அளிக்க பவுல் நமக்கு அறிவுறுத்துகிறார். (1தீமோத்தேயு5:17)

கடவுள் மீதும் அவருடைய மக்கள் மீதும்

உள்ள அன்பின் சாட்சியம், நிகழ்ச்சியைப் பார்ப்பவர்களின் பார்வையில் நமது விசுவாசத்தின் சிறந்த சான்றாகும். இதற்கு நேர்மாறானதும் உண்மைதான், நாம் கடவுள் மீதும் அவருடைய மக்கள் மீதும் அன்பை வெளிப்படுத்தாவிட்டால், நம்பிக்கை குறைந்துவிடும், மேலும் நமது நம்பிக்கை மதிக்கப்படாது அல்லது பின்பற்றப்படாது. (எபிரெயர் 13:7)

**முடிவுரை**

வாழ்க்கையின் குளிர்காலம் ஒரு முடிவு அல்ல, மாறாக ஒரு தனித்துவமான சாத்தியக்கூறுகளின் பருவம் என்பதை இந்த விவிலிய விசுவாச வீரர்களின் வாழ்க்கை நமக்கு நினைப்பூட்டுகிறது. பல சதாப்தங்களாக திரட்டப்பட்ட ஆவிக்குரிய மூலதனம் கிறிஸ்துவின் சரீரத்திற்கு விலைமதிப்பற்ற பொக்கிஷமாக மாறுகிறது. பிரச்சனை நிறைந்த உலகில் கிறிஸ்துவுக்குள் வளருகிறவர்களை ஊக்குவிக்கவும், வழிகாட்டவும், வழிநடத்தவும், நிலைப்படுத்தவும் முதிர்ச்சியடைந்த சகோதரர்கள் தனித்துவமான நிலையில் உள்ளனர்.

அரச சபைகளில் தானியேல் போலவும், மோசே யோசுவாவுக்குப் பயிற்சி அளித்தது போலவும், அவர்களின் செல்வாக்கு தொலைநோக்குடையதாக இருக்கலாம். பேதுருவும் யோவானும் சத்தியத்தைக் காத்தது போல, அவர்கள் நல்ல கோட்பாட்டின் நங்கூரங்களாக இருக்க முடியும். "கர்த்தர் உத்தமரென்றும், என் கன்மலையாகிய அவரிடத்தில் அநீதியில்லையென்றும், விளங்கப்பண்ணும்படி, அவர்கள் முதிர்வயதிலும் கனி தந்து, புஷ்டியும் பசுமையுமாயிருப்பார்கள்." (சங்கீதம் 92:14,15)

வாழ்க்கையின் குளிர்காலத்தில் நுழையும் அல்லது வாழும் நாம் ஒவ்வொருவரும் இந்த அழைப்பை தைரியத்துடனும் கருணையுடனும் ஏற்றுக்கொள்வோமாக. ஞானத்தின் பொக்கிஷங்களை வழங்குவதற்கும், சகோதரர்களிடம் முதலீடு செய்வதற்கும், கடவுளுடைய வார்த்தையின் உண்மைகளின் ஆழத்தையும் அழகையும் பகிர்ந்து கொள்வதற்கும், நமது கர்த்தரை மகிமைப்படுத்தும் மற்றும் எதிர்கால சந்ததியினரை ஆசீர்வதிக்கும் அசைக்க முடியாத நம்பிக்கையின் மரபை விட்டுச் செல்வதற்கும் இது ஒரு அருமையான பருவமாகும்.



இன்றைய தீர்க்கதரிசனம்

# டெக்சாஸின் வெள்ளம்

"ஜனத்துக்கு விரோதமாய் ஜனமும், இராஜ்யத்துக்கு விரோதமாய் இராஜ்யமும் எழும்பும், பஞ்சங்களும், கொள்ளைநோய்களும், பூமியதிர்ச்சிகளும் பல இடங்களில் உண்டாகும் "(மத்தேயு 24: 7)

2025 ஜூலை மாதம் டெக்சாஸில் ஏற்பட்ட வெள்ளம், இளங்கியர்கள் உயிரிழந்ததையும், கொந்தளித்த வெள்ளநீரால் ஏற்பட்ட அழிவையும் ஜனங்கள் கண்டபோது, நாடு முழுவதும் துயரத்தில் ஆழ்ந்தது. பாதிக்கப்பட்டவர்கள். சரியான நேரத்தில் தப்பிக்க, போதுமான எச்சரிக்கை ஏன் வெளியிடப்பட வில்லை என்பது குறித்து கேள்விகள் எழுந்தன.

கத்ரீனா சூறாவளிக்குப் பிறகு நியூ ஆர்லியன்ஸில் நிவாரணப் பணிகளை ஒருங்கிணைத்த ஓய்வு பெற்ற இராணுவ ஜெனரல், திவால் ஸ்ட்ரீட் ஜர்னலுக்கு அளித்த பேட்டியில், தேம்ப் மிஸ்டிக் இறப்புகள் " எச்சரிக்கை மற்றும் வெளியேற்றத்தில் ஏற்பட்ட ஒரு பெரிய தோல்வி" என்று விவரித்தார், இத்தகைய பாதிப்பை தடுத்திருக்க முடியும் என்றும் கூறினார். அமெரிக்க கடலோர காவல் படை, உள்ளூர் அதிகாரிகள் மற்றும் ஏராளமான தன்னார்வலர்கள் குறிப்பிடத்தக்க முயற்சி எடுத்த போதிலும், வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டவர்களில் பலர் கண்டுபிடிக்கப்பட வில்லை.

சமீபத்திய காலத்தில் ஏற்பட்ட மிகக் கடுமையான வெள்ளம், 2022 ஆம் ஆண்டுபாகிஸ்தானில் ஏற்பட்டது. ஜூன் முதல் அக்டோபர் 2022 ஆம் ஆண்டு பாகிஸ்தானில் ஏற்பட்டது. ஜூன் முதல் அக்டோபர் 2022 வரை, நாடு பேரழிவு தரும் வெள்ளத்தை சந்தித்தது. இது 30 மில்லியனுக்கும் அதிகமான மக்களை இடம்பெயர்த்து சுமார் 15 பில்லியன் அமெரிக்க டாலர் மதிப்புள்ள சேதங்களை ஏற்படுத்தியது. துரதிர்ஷ்ட வசமாக, இது தனித்துவமான பேரழிவு அல்ல, பருவமழை வெள்ளம் வரும் சில மாதங்களுக்கு முன்னரே வறட்சி ஒரு பெரிய கவலையாக இருந்தது. 2022 வெள்ளத்திற்குப் பிறகு, பாகிஸ்தான், அமெரிக்கா, சுவிட்சர்லாந்து மற்றும் சிங்கப்பூரைச் சேர்ந்த விஞ்ஞானிகள் குழு, "காபூல் நதிப் படுகையில் (ஆப்கானிஸ்தான் மற்றும் பாகிஸ்தான்) திட்டமிடப்பட்ட வெள்ளம் தீவிரமடைதலுக்கு மத்தியில் கடந்த நான்கு நூற்றாண்டுகளில் அதிகரித்து வரும் வறட்சி அபாயங்கள்" என்ற நீண்ட தலைப்பில் ஒரு ஆய்வை வெளியிட்டது, இது மர வளைய பகுப்பாய்வின் அடிப்படையில் நீர்நிலை சுழற்சி வலுவடைவதைக் குறிக்கிறது. இந்த ஆய்வு புவி இயற்பியல் ஆராய்ச்சி கடிதங்களில் வெளியிடப்பட்டது. இந்துகுஷ் மலைகளின் தரவைப் பயன்படுத்தி, விஞ்ஞானிகள் 1637 முதல் 2018 வரை கிட்டத்தட்ட நான்கு நூற்றாண்டுகளாக காபூல் நதிப் படுகையில் வருடாந்திர மழைப்பொழிவு தரவு ஆபத்தான போக்குகளைக் காட்டுகிறது" என்று கொலம்பியா பல்கலைக்கழகம் ஆசிரியர் டாக்டர் நுயென் பகிர்ந்து கொண்டார். "கடந்த நான்கு நூற்றாண்டுகளின் போக்குகளைப் பார்க்கும்போது, வறட்சிகள் மிகவும் கடுமையானதாகவும், குறுகியதாகவும், அடிக்கடி நிகழ்வதாகவும், அடிக்கடி மழைக்காலங்கள் ஏற்படுவதையும் நாம் காண்கிறோம்."



1913 ஆம் ஆண்டு சீனாவில் ஏற்பட்ட வெள்ளம் வரலாற்றில் மிக மோசமானது என்று சிலர் கருதுகின்றனர், இருப்பினும் கீழே பட்டியலிடப்பட்டுள்ள 1887 வெள்ளத்தை விக்கிபீடியா மோசமானதாக பட்டியலிடுகிறது. நீரில் மூழ்குதல், பஞ்சம் மற்றும் நோயால் 1 முதல் 4 மில்லியன் பேர் இறந்ததாக மதிப்பிடப்பட்டுள்ளது. இந்த நிகழ்வு யாங்சே, மஞ்சள் மற்றும் ஹுவாய் நதிகளைப் பாதித்தது, இது ஹெனான் மாகாணத்திலும் அதற்கு அப்பாலும் பெரிய பகுதிகளைப் பாதித்தது. கனமழை, பனி உருகுதல் மற்றும் தொடர்ச்சியான கடுமையான சூறாவளிகள் ஆகியவையே 1931 வெள்ளத்திற்கு காரணமாக இருக்கலாம். அவை மத்திய சீனாவின் பரந்த பகுதிகளை மூழ்கடித்து, பரவலான அழிவு மற்றும் இடம்பெயர்வுக்கு வழிவகுத்தன.

## குறிப்பிடத்தக்க மற்ற வெள்ளங்கள்

● சீனாவில் 1887 ஆம் ஆண்டு ஏற்பட்ட மஞ்சள் நதி வெள்ளம் மிக அதிக இறப்பு எண்ணிக்கையை ஏற்படுத்தியது, இது 9000,000 முதல் 2 மில்லியன் வரை மதிப்பிடப்பட்டுள்ளது.

● 1889ஆம் ஆண்டு பென்சில்வேனியாவில் ஏற்பட்ட ஜான்ஸ்டவுன் வெள்ளத்தில், அணை உடைப்பு ஏற்ப்பட்டதால் 2,200க்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டனர்.

● 1927 ஆம் ஆண்டு அமெரிக்காவில் மிசிசிப்பி நதி வெள்ளம் நாட்டின் வரலாற்றில் மிகவும் பேரழிவு தரும்

நதி வெள்ளமாகும், இது 27,000 சதுர மைல்களை மூழ்கடித்து குறிப்பிடத்தக்க சேதத்தையும் இடப்பெயர்ச்சியையும் ஏற்படுத்தியது.

● 2005 ஆம் ஆண்டு ஏற்பட்ட கத்ரீனா சூறாவளி, அணை உடைப்பு காரணமாக நியூஆர்லியன்ஸில் பேரழிவு தரும் வெள்ளத்தை ஏற்படுத்தியது, இதன் விளைவாக் 1, 833 இறப்புகளும் பில்லியன் கணக்கான டாலர்கள் சேதமும் ஏற்பட்டது.

அமெரிக்க இயற்கை ஆபத்து புள்ளிவிவரங்கள் திடீர் வெள்ளம் மற்றும் நதி தொடர்பான சம்பவங்களால் மொத்தம், 2,770 இறப்புகளைப் பதிவு செய்கின்றன. மழையால் ஏற்படும் வெள்ளம், படகு விபத்துக்கள், பணியிடங்கள் மற்றும் முகாம்களின் போது ஏற்படும் சம்பவங்கள், அத்துடன் மொபைல் மற்றும் நிரந்தர வீடுகளுக்குள் ஏற்படும் இறப்புகள் வெள்ள இறப்புகளில் அடங்கும். சராசரியாக, ஒவ்வொரு ஆண்டும் 125 மில்லியன் ஜனங்கள் அழிவுகரமான நதி வெள்ளத்தால் பாதிக்கப்படுகின்றனர், இதனால் அவர்கள் வீடுகளை காலி செய்யவேண்டிய கட்டாயம் ஏற்படுகிறது, நிதி இழப்புகளை எதிர்கொள்கிறார்கள், மேலும் காயம் அல்லது மரண அபாயத்தை எதிர்கொள்கிறார்கள். ஜெர்மனி மற்றும் பெல்ஜீயம் போன்ற திடீர் வெள்ளத்தின் போது அணைகள் அல்லது மதகுகள் திடீரென உடைந்து விழும் போது மிக மோசமான நிகழ்வுகள் நிகழ்கின்றன. வெள்ளத்தால் ஏற்படும் உலகளாவிய பொருளாதார சேதம், தோராயமாக 100 பில்லியன் ஆகும், இது பெரிய பேரழிவுகள் மற்றும் காலப்போக்கில் குவியும் ஏராளமான சிறிய, குறைவாக கவனிக்கப்படும் நிகழ்வுகள் இரண்டின் விளைவாகும்.

ஆராய்ச்சியாளர்கள் காரண காரணிகளின் சிக்கலான வலையமைப்பை அடையாளம் கண்டுள்ளனர். இதில் வறுமை, ஜன தொகை

அதி ... ல்
குடி ... ார
கார ... ்ற
இய ... வும்
கடு ... ான
வெ ... கள்
அவ ... து
விழி ... ான
பாது ... கள்
இல் ... ாக
இரு ...



வே ...

வானத்தின்கீழே ஜீவசுவாசமுள்ள சகல மாம்ச ஜந்துக்களையும் அழிக்க நான் பூமியின் மேல் ஜலப்பிரளயத்தை வரப்பண்ணுவேன்..... ஆனாலும் உன்னுடனே என் உடன்படிக்கையை ஏற்படுத்துவேன், ... நீயும் உன் வீட்டார் அனைவரும் பேழைக்குள் பிரவேசியுங்கள், இந்தச் சந்ததியில் உன்னை எனக்கு முன்பாக நீதிமானாகக் கண்டேன் (ஆதியாகமம் 6:17, 18, 7:1)

நீதியான எட்டுபேரை தவிர, பூமியின் அவபக்தி நிறைந்த அனைத்து ஜனங்ளை ஒழிக்க, நோவாவின் காலத்தில் தேவன் உலகளாவிய வெள்ளத்தை அனுப்பினார் (2பேதுரு2:5) விழுந்து போன தேவதூதர்கள் மற்றும் மனிதப் பெண்களின் தவறான இணைப்பால் உருவாக்கப்பட்ட ஒரு கலப்பு இனத்தையும் அது அழித்தது (ஆதியாகமம் 6:1, 2)

வெள்ளத்திற்கு முன்பு, ஆதாம் மற்றும் ஏவாளின் கீழ்ப்படியாமைக்காக பூமி சபிக்கப்பட்டது (ஆதியாகமம் 3:17) தேவனின் தலையீட்டால் வேதத்தின் வெள்ளம் ஏற்பட்டது, ஆனால், இயற்கை பேரழிவுகள் இந்த சாபத்தின் விளைவாகவே நிகழ்கின்றன. இருப்பினும், அலட்சியம் அல்லது ஊழல் காரணமாக மனிதர்களும் இந்த பேரழிவுகளுக்கு பங்களிக்கின்றனர். இதன் காரணமாக ஜனங்கள்துன்பப்படுகின்றனர், பூமியும் ஏகமாய்த் தவித்துப் பிரசவவேதனைப்படுகிறது. அது ஒரு நாள் பரிபூரணமான ஏதேன் நிலைக்கு மீண்டும் கொண்டுவரப்படும் நாளுக்காகக் காத்திருக்கிறது. அப்போது அது உயிர்த்தெழுந்த, பூரணமாக்கப்பட்ட மனுக்குலத்திற்கு ஏற்ற வீடாக இருக்கும். (வெளிப்படுத்தல் 21:1-4)

இந்தப் பேரழிவுகள் இயற்கையாகவே நடக்கும் என்பதை இயேசு அறிந்திருந்தாலும்,

அவற்றை சுவிசேஷ யுக அறுவடையின் முடிவின் அடையாளங்களாகவும், ஆயிர வருட யுகத்திற்கு மாறுவதற்கு முன்பு ஏற்படவிருக்கும் மகா உபத்திரவ காலமாகவும் விவரிக்கிறார் (மத்தேயு24:21)இத்தகைய பேரழிவுகள் அடிக்கடி, கடுமையாக நிகழ்வது அவருடைய வருகையைச் சுட்டிக்காட்டும். லூக்கா பதிவு செய்த அதே சொற்பொழிவில், மத்தேயு மற்றும் மாற்கு குறிப்பிடாத சில விவரங்களை அவர் பகிர்ந்து கொள்கிறார்."அப்போழுது அவர் அவர்களை நோக்கி - ஜனத்துக்கு விரோதமாய் ஜனமும், இராஜ்யத்துக்கு விரோதமாய் இராஜ்யமும் எழும்பும். பல இடங்களில் மகா பூமியதிர்ச்சிகளும், பஞ்சங்களும், கொள்ளைநோய்களும் உண்டாகும், வானத்திலிருந்து பயங்கரமான தோற்றங்களும் பெரிய அடையாளங்களும் உண்டாகும். இவைகளெல்லாம் நடப்பதற்கு முன்னே என் நாமத்தினிமித்தம்,அவர்கள் உங்களைப் பிடித்து, ஜெப ஆலயங்களுக்கும் சிறைச்சாலைகளுக்கும் ஒப்புக்கொடுத்து, இராஜாக்கள் முன்பாகவும் அதிபதிகள் முன்பாகவும் உங்களை இழுத்துக் துன்பப்படுத்துவார்கள்" (லூக்கா 21:10-12) "யாதொரு ஜாதியாரும் தோன்றினது முதல் அக்காலமட்டும் உண்டாயிராத ஆபத்துக்காலத்தில்" இந்த நிகழ்வுகள் நிகழும் (தானியேல் 12:1 , மத்தேயு24:21 ) இயேசு மேலும் துன்பங்களை உறுதிப்படுத்துகிறார்." இவைகளெல்லாம் வேதனைகளுக்கு ஆரம்பம்" (மத்தேயு24:8) - பெரிய பிரச்சினைகளின் ஆரம்பம். இன்று நாம் காணும் சிரமங்களிலிருந்து , நாம் அத்தகைய காலத்தின் நடுவில் இருக்கிறோம் என்பது தெளிவாகிறது.

பூமியை பரிபூரண மனிதனுக்கு ஏற்ற வீடாக மாற்ற, அதன் தட்பவெப்ப நிலையிலும் மண்ணிலும் பெரிய மாற்றங்கள் ஏற்பட வேண்டும் என்பதில் நாம் உறுதியாக இருக்கலாம் (ஆதியாகமம் 2:8) சூறாவளிகள், பூகம்பங்கள், வறட்சிகள், வெள்ளங்கள், பனிப்புயல்கள் மற்றும் சிமூம்கள் போன்ற கடுமையானவெப்பம் பூமியின் அபூரணத்தைக் காட்டுகின்றன. இத்தகைய நிகழ்வுகள் அரிதாகவே தேவனுடைய நேரடி திட்டத்தினால் நிகழ்கின்றன. ஆயிரமாண்டின் இறுதிக்குள், மனிதனின் சோதனை முடிவடையும் போது, மனிதனின் ஏதேன் வீடாக பூமி அதன் சிறந்த நிலையை அடைய வேண்டும், அப்போது கீழ்ப்படிதலுள்ள அனைவரும் தேவனின் தயவை அனுபவிக்கச் சரியான காலம் வரும். பின்னர் "இனி ஒரு சாபமுமிராது" (வெளிப்படுத்துதல் 22:3), மனிதன் மீதும் அல்ல, அவன் நிமித்தமாக பூமியின் மீதும் அல்ல. பூமி - மனுக்குலத்தைப் போலவே - படிப்படியாக மேசியாவின் மகிமையான ஆட்சியின் கீழ், எல்லா வகையிலும் முழுமையான பரிபூரணத்தை அடையும். து

## பிரசங்கி 3:1-8

ஒவ்வொன்றிற்கும் ஒவ்வொரு காலமுண்டு; வானத்தின் கீழிருக்கிற ஒவ்வொரு காரியத்துக்கும் ஒவ்வொரு சமயமுண்டு. பிறக்க ஒரு காலமுண்டு, இறக்க ஒரு காலமுண்டு; நட ஒரு காலமுண்டு, நட்டதைப் பிடுங்க ஒரு காலமுண்டு; கொல்ல ஒரு காலமுண்டு, குணமாக்க ஒரு காலமுண்டு; அடிக்க ஒரு காலமுண்டு, நடனம்பண்ண ஒரு காலமுண்டு; கற்களை எறிந்துவிட ஒரு காலமுண்டு, கற்களைச் சேர்க்க ஒரு காலமுண்டு; தழுவ ஒரு காலமுண்டு, தழுவாமலிருக்க ஒரு காலமுண்டு; தேட ஒரு காலமுண்டு, இழக்க ஒருகாலமுண்டு; காப்பாற்ற ஒரு காலமுண்டு, எறிந்துவிட ஒரு காலமுண்டு;



கிழிக்க ஒரு காலமுண்டு, தைக்க ஒரு காலமுண்டு, மவுனமாயிருக்க ஒரு கால முண்டு, பேச ஒரு காலமுண்டு; சிநேகிக்க ஒரு காலமுண்டு, பகைக்க ஒரு காலமுண்டு; யுத்தம்பண்ண ஒரு கால முண்டு, சமாதானம்பண்ண ஒரு காலமுண்டு.